பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalāikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 29, வெள்ளிக்கிழமை 13.01.2017 கதிர் 69


வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளுக்கு
நாடுங்கள்
சன்சிகா
நகையகம்
இல.114, பஸார் வீதி,
வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

## ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசு உறுதியாம்; ஆனால் வெளிநாட்டு நீதிபதிகள் விடயத்தில்தான் முரண்பாடாம்!

### லண்டனில் இப்படி விளக்கமளித்தார் மங்கள




லண்டன், ஜன.13

ஐ.நா.மனிதஉரிமைகள்கவுன்ஸிலில் இலங்கையும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசு பற்றுறுதியாகஉள்ளது. ஆனால் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கியதான கலப்பு நீதிமன்றப் பொறிமுறை குறித்த விடயத்தில்தான் அரசுக்குள் வேறுபாடான கருத்துகள் நிலவுகின்றன.

–இவ்வாறு லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு பொது நிகழ்வில் விளக்கமளித்தார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

பிரிட்டனுக்குச் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, லண்டன் சத்தம் ஹவுஸில் புதனிரவு இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவிக்கையில்–

ஆட்சிமாற்றத்தின் பின்னர் நிலைமைகள் எதிர்பார்க்கப்படுவது போல் நூற்றுக்கு நூறு வீதம் இல்லாவிட்டாலும், மனித உரிமை நிலைமைகள், பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல்

பக்கம் 20 »

# கண்டியில் பறவைக் காய்ச்சல் மேலும் பலருக்கு தொற்றியது!

### டாக்டர், 7 மருத்துவ ஊழியர்கள் பாதிப்பு வேறு 6 நோயாளரையும் பீடித்திருக்கலாம்

கண்டி, ஜனவரி 13

**கண்டி போதனா ஆஸ்பத்திரியில் நேற்றுமுன்தினம் இரண்டு நோயாளர்களின் உயிர்களைப் பலிகொண்ட 'எச்.1 என்.1' வைரஸ் காய்ச்சல் (பறவைக் காய்ச்சல்) மேலும் பலருக்குத் தொற்றியிருப்பதான திடுக்கிடும் தகவலை கண்டி போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.எம்.சமன் கே.ரத்னாயக்கா வெளியிட்டிருக்கின்றார்.**

ஆஸ்பத்திரியின் சிறுநீரக மாற்றுச்சிகிச்சைப்பிரிவின்ஒரு வைத்தியர் உட்பட எட்டுப் பணியாளர்களுக்கு இந்த வைரஸ் தொற்றியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற ஆறு நோயாளர்களுக்கு அந்த வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம்அப்பிரிவில் உயிரிழந்த மூன்று நோயாளர்களில் இருவரின்உயிரிழப்புக்கு இந்த இன்புளுவென்ஸா வைரஸே காரணம் எனக் கூறப்படுகின்றது.

பக்கம் 19 »

### ஊறணிப் பிரதேசத்தில் இருந்து மீன்பிடிக்கச் செல்வதற்கு அனுமதி

#### கடற்கரைப் பிரதேசத்தை விடுவிக்கிறது படை

யாழ்ப்பாணம், ஜன.13

வலிகாமம் வடக்கில், இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து வரும் ஊறணிப் பிரதேசத்தில் சுமார் நானூறு மீற்றர் அகலமான கடற்கரைப் பகுதியும், அதில் உள்ள இறங்குதுறையும் அப்பிரதேச கடற்றொழிலாளர்களின் பயன்பாட்டுக்காக இராணுவத்தினால் விடுவிக்கப்படவிருக்கின்றன.

பக்கம் 20 »

### ஜனாதிபதி முறையை நீக்க முடியாது அரசுத் தரப்பிலிருந்து இப்படி அறிவிப்பு

கொழும்பு, ஜன.13

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிக்கு அமைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க முடியாது என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மல்வத்த பீடாதிபதியை நேற்றுக் காலை சந்தித்ததன் பின்னர்ஊடகங்களிடம்கருத்து வெளியிட்ட போதே அமைச்சர்

பக்கம் 20 »

### அளப்பு அருணாசலம்



சுமந்திரன், மங்கள உவை ரெண்டு பேரின்ர வியாக்கியானமும் 'வரும்; ஆனா வராது...!' எண்ட கதைமாதிரித்தான் கிடக்கு...


### கிளிநொச்சித் தளபதியாக ஜெனரல் காரியகரவன்ன

கிளிநொச்சி, ஜன.13

கிளிநொச்சி பாதுகாப்பு தலைமையகத்தின் புதிய கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் அஜீத் காரியகரவன்ன, நியமிக்கப்பட்டுள்ளார் என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார்.

பக்கம் 20 »

## ஒற்றையாட்சியும் இல்லை; சமஷ்டியும் கிடையாது இணைப்பும் சாத்தியமல்ல என்கிறார் சுமந்திரன்!



கொழும்பு, ஜன.13

முஸ்லிம் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும் வரைவடக்கு–கிழக்கு இணைப்பு சாத்தியமாகாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உத்தேச அரசமைப்புத்தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போது சமஷ்டியா ஒற்றை ஆட்சியா என்பது தொடர்பில் நாடளாவிய ரீதியில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய அரசமைப்பானது இந்த வார்த்தைப் பிரயோகங்களை நீக்கிவிட்டு, பகிரப்படுகின்ற அதிகாரங்களை மீளப் பறித்தெடுக்க முடியாத வகையான சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கி, எந்தவொருசமூகத்தையும் பாதிக்காத முழுமையான அதிகாரப்பகிர்வாக அமையும் வகையிலேயே உருவாக்கப்படுகின்றது என்றும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நிறைவேற்று அதிகாரமுள்ளஜனாதிபதிமுறையில்

பக்கம் 20 »

### எல்லை நிர்ணய அறிக்கை கிடைத்ததும்

# 17ஆம் திகதி மாலையே உள்ளூராட்சித் தேர்தலுக்கு வர்த்தமானி அறிவித்தல்!

### உறுதியாகக் கூறுகின்றார் அமைச்சர் பைஸர்

கொழும்பு, ஜன.13

எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கை எதிர்வரும் 17ஆம் திகதி கையளிக்கப்பட்டதும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

சிறிலங்காசுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில்நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

உள்ளூராட்சிஅமைச்சர்தான் அறிக்கைவெளிவருவதில்தாமதத்தை ஏற்படுத்தினார் என எல்லைநிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் அசோக பீரிஸ் கூறியுள்ளார். கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் என்னை சிறந்தவர்என்றுஅவர்புகழாரம்சூட்டியிருந்தார். ஆனால்இடைப்பட்ட காலத்தில் நான் கெட்டவனாகி விட்டேன்.

எல்லை நிர்ணய ஆணைக் குழுவை பூரண ஜனநாயகத்துடன் செயற்படுவதற்கு நான் அனுமதியளித்திருந்தேன். நான் அவர்களின் செயற்பாட்டில் ஒருபோதும் தலையிடவில்லை. அவர்களின் கோரிக்கைக்கு அமைய காலத்தையும் நீடித்துக்கொடுத்தேன்.

எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கை இரண்டு வாரங்களுக்குமுன்னர்சமர்பிக்கப்பட்டபோது அதில் இருவர் கையொப்பமிட்டிருக்கவில்லை. நான் ஜனாதிபதியின் சட்டத்தரணி என்ற வகையில் சட்டமா அதிபருக்குப் பொறுப்புக்கூறுபவனாகவும்உள்ளேன். எனவே அந்த அறிக்கையில் இருவர் கையொப்பமிடாமல்அதனைப் பொறுப்பேற்க முடியாது. அது ஜனநாயகமும், நல்லாட்சியும் அல்ல.

எதிர்வரும்17ஆம்திகதிஎல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையை குழுவின் தலைவர் அசோக பீரிஸ் கையளிக்கவுள்ளார் என்று தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் அன்றைய தினம் அறிக்கை கிடைத்தவுடன்அன்றுமாலையே உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவேன்.

சிறிலங்காசுதந்திரக்கட்சிக்குத் தேர்தலைப்பிற்போடவேண்டிய எந்தவொருதேவையும்இல்லை. எமக்கு சிறந்த தலைவர் ஒருவர் இருக்கின்றார். ஜனாதிபதித்தேர்தலிலேயேஎமதுதலைவர்வெற்றி பெற்றுள்ளார். இவ்வாறான சிறிய தேர்தல்கள் எமக்கு ஒரு பொருட்டல்ல.– என்றார்.

## பண்டாரவளை – கொஸ்லந்தவில் நாக்கு ஏக்கரில் கஞ்சா செய்கை

கொழும்பு ஜன.13

பண்டாரவளை – கொஸ்லந்த பிரதேசத்தில் 4 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட கஞ்சா தோட்டம் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. கஞ்சா பயிரிட்டார்கள் என்ற சந்தேகத்தின்பேரில்நான்குபேர்கைதுசெய்யப்பட்டுள்ள னர்.

மேற்படி கஞ்சா தோட்டம் தொடர்பாகப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன்போதே அந்தத் தோட்டம் கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. (ம)

## யாழ். சிறை அரசியல் கைதிகளுக்கு பொங்கல் பொருள்கள் கையளிப்பு

### அகில இலங்கை இந்துமாமன்றம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் பொங்கல் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி மன்றத்தின் பிரதிநிதிகளும்நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளும் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள கைதிகளுடன் கலந்துரையாடினர். இதன் பின்னர் அவர்களுக்கு பொங்கல் பொருட்களை அன்பளிப்பாக வழங்கினர்.

இதன்போது இடம்பெற்ற உரையாடலின்போது, தங்கள் விடுதலைக்கு உதவுங்கள் என கைதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயம் தொடர்பாகத் தாங்கள் உரியவர்களுடன் தொடர்ந்து கலந்துரையாடி வருகின்றார்கள் எனவும் தொடர்ந்தும் இதை வலியுறுத்துவார்கள் எனவும் நல்லை ஆதீன முதல்வரும் இந்து மாமன்றப் பிரதிநிதிகளும் தெரிவித்தனர். (ம)

## பிறந்தநாள் வீட்டில் உணவுண்ட பத்து பேர் வைத்தியசாலையில்!

### கரணவாய் கொற்றாவத்தையில் சம்பவம்

வடமராட்சி ஜன.13

வடமராட்சி – கொற்றாவத்தையில் பிறந்தநாள் நிகழ்வில் உணவு உட்கொண்ட ஐந்து சிறுவர்கள் உட்பட பத்து பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கரணவாய் வடக்கு கொற்றாவத்தை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிறந்தநாள் நிகழ்வு ஒன்று நடைபெற்றது. இதில்,நள்ளிரவு11மணியளவில் உணவு உட்கொண்டுவிட்டு உறங்கச் சென்றவர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டது என்று கூறப் படுகின்றது.

இவர்கள் நேற்று வியாழக் கிழமை அதிகாலை 2.30 மணியளவில் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு :-

ஜெ.சுபாசினி (வயது44), த.சிங்கராசா (வயது38), அ.அபிலாஸ் (வயது13), ஆ.ஆனந்தன் (வயது57), ச.துகானா (வயது4), ச.சதுசிகன் (வயது10), ச.சந்தோஸ் (வயது 08), த.தர்சிகன் (வயது 25), சி.கசீனா (வயது 27), ச.சுலக்சனா (வயது 08) ஆகியோர்.

இந்த விடயத்தைக் கேள்வியுற்ற கரவெட்டி சுகாதாரப் பகுதியினர் அந்த வீட்டுக்குச் சென்று சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். உணவு பழுதடைந்ததா அல்லது உணவிற்குள் ஏதாவது விசஜந்துக்கள் வீழ்ந்திருக்குமா என்பது தொடர்பாக அறிய சோதனைகள் இடம் பெற்று வருகின்றன. (ம–40)

## ஆசிரியரின் தாக்குதலில் மாணவன் காயம்

தென்மராட்சியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர் தாக்கியதில் மாணவன் ஒருவன் காயமடைந்தான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில்தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவனே காயமடைந்தான் என்று கூறப்படுகின்றது.

காயமடைந்த மாணவன் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (ம–21)

## நெடுந்தீவில் பனம் விதை நாட்டிய மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு



நெடுந்தீவில் பனைவிதைகளை நடுகை செய்து பராமரிக்கும் 'கற்பக கானகத் திட்டத்'தில் ஈடுபட்டுள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக கனடாவில் உள்ள நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் அவர்களுக்கு பரிசில்கள் வழங்கிப் பாராட்டிக் கௌரவித்துள்ளது.

இந்த வைபவம் நேற்று வியாழக்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினர்.

மேற்படி ஒன்றியம் 2013 ஆம் ஆண்டில் இருந்து நெடுந்தீவில் பாடசாலை மாணவர்கள் மூலம் பனைவிதை நடுகையை ஊக்குவித்து வருகிறது. 10 ஆயிரம் பனைகளை உருவாக்கும் நோக்கில் கற்பக கானகம் என்ற பெயரில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இதில் பங்கேற்கும் மாணவர்களுக்கு அவர்களால் நடப்படும் ஒவ்வொரு பனைவிதைக்கும் 50 ரூபா வீதம் வழங்கப்படும் எனவும், நடப்பட்ட பனை விதைகள் வளர்ந்திருந்தால் நான்கு ஆண்டுகளின் பின்னர் பனையொன்றுக்கு 50 ரூபா வீதம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இது வரையில் ஏறத்தாழ எண்ணாயிரம் பனைவிதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

பனைவிதைகளை நடுகை செய்த மாணவர்களுக்கான பணம் நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தால் ஹற்றன் நஷனல் வங்கியில் வைப்பில் இடப்பட்டு, வங்கி கணக்குப் புத்தகங்கள் பரிசளிப்பின் போது கையளிக்கப்பட்டுள்ளன.

பரிசளிப்பு நிகழ்ச்சியில் மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், கனடா நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த சு.கோவிந்தசாமி, சி.பரராஜசிங்கம், ஐ.சண்முகநாதன் மற்றும் நெடுந்தீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சாரதாதேவி கிருஸ்ணதாசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம)

## கனடாவில் ஞாயிற்றுக்கிழமை வடக்கு முதல்வர் விசேட உரை

கனடா, ஜன.12

கனடாவுக்குச் சென்றுள்ள வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அங்கு பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு விசேட உரையொன்றை ஆற்றவிருக்கின்றார்.

இந்தக் கூட்டம் ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணிக்கு 875 Morningside Ave Scarborough வில் அமைந்திருக்கும் ANAMCENTRE – Scarborough எனும் இடத்தில் நடைபெறவுள்ளது.

தாயக மக்களின் சமகால நிலை குறித்து விரிவான உரையை ஆற்றவிருக்கும் முதலமைச்சர் பொதுமக்களின் கேள்விகளுக்கும் பதிலளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கனடா வாழ் பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு விழா ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (ம)

## பெண்கள் தனித்திருந்த வீட்டில் நள்ளிரவு நேரம் கொள்ளை

### குடும்பப் பெண்ணுக்குக் கத்திவெட்டு

அரியாலை, ஜன.13

யன்னல் கம்பியை வளைத்து உள்ளே சென்ற கொள்ளையன் ஒருவன் வீட்டில் இருந்த குடும்பப் பெண்ணைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச்சென்றான்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் அதிகாலை 2.30 மணியளவில் அரியாலையில் இடம் பெற்றது. சம்பவ தினம் குடும்பத் தலைவர் கொழும்புக்குச் சென்றிருந்த நிலையில், அவரது மனைவியும் சிறுபிள்ளையும் தாயாரும் மட்டுமே வீட்டில் இருந்துள்ளனர்.

அதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய கொள்ளையன் வீட்டின் பின் யன்னலைத் திறந்து கம்பிகளை வளைத்து விட்டு உள்ளே சென்றான். ஆளரவம் கேட்டவுடன் பெண்கள் விழித்தெழுந்து அலறியடித்தனர்.

இதன்போது கத்தவேண்டாம் என அவர்களை அச்சுறுத்திய கொள்ளையன் திடீரென்று குடும்பப் பெண்ணைக் கத்தியால் வெட்டிவிட்டு அவர் அணிந்திருந்த ஒரு பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச்சென்றான் எனக் கூறப்படுகின்றது.

கையில் வெட்டுக் காயத்திற்கு இலக்கான குடும்பப் பெண் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றார். அவரது காயத்திற்கு ஆறு தையல்கள் போடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம)

# போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுவது தொடர்பாக ஆராயப்படும்

## ஒன்ராறியோ மாகாண பெண்கள் விவகார அமைச்சர் உறுதி



கொழும்பு, ஜன.13

வடக்கில் போரால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு உதவுவது குறித்து ஆராயப்படும் என்று கனடா - ஒன்ராறியோ மாகாணத்தின் பெண்கள் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கனடா - ஒன்ராறியோ மாகாணத்தின் பெண்கள் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் Tracy Mac Charles அவர்களை Queens Park வளாகத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சந்தித்துப் பேசினார்.

முதல் தடவையாக கனடாவுக்கு வருகை தந்திருக்கும் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதுடன் பல அரசியல் சந்திப்புக்களையும் நடத்தி வருகின்றார். அவ்வாறான சந்திப்புகளில் ஒன்றாக இந்தச்சந்திப்பும் அமைந்தது.

இந்தச் சந்திப்பின் போது -

''வடமாகாணத்தில் நடைபெற்ற போர் காரணமாகப் பெண்கள் தலைமை ஏற்றிருக்கும் குடும்பங்கள் பெரியளவில் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றன.

''அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் சமூக, உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இவை குழந்தைகளின் எதிர்காலத்தைக் கேள்விக்கு உள்ளாக்குகின்றன.

''அங்கவீனர்களாக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரமும் சிக்கல்களைக்கொண்டுள்ளது.'' என்று விக்னேஸ்வரன் விளக்கமளித்தார்.

இந்தப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் அவர்களின் வினைத் திறனை அதிகரித்து நம்பிக்கையூட்டவும் ஐக்கிய நாடுகள்சபைஉருவாக்கியிருக்கும் சட்ட நியமங்கள் வாயிலாக, ஒன்ராறியோ அரசால் உதவ முடியுமா? என்று அவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த ஒன்ராறியோ மாகாணத்தின் பெண்கள் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் -

''தமிழ் மக்களின் துயரத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்கிறேன். இந்தப் பாதிப்புகள் தொடர்பான புள்ளி விவரங்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் அடையாளம் காணப்பட்ட சிக்கல்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பதற்கான வழிகளைக் கண்டறிய முடியும்.

''வடமாகாண சபையுடன் இணைந்து பணியாற்றக் கூடிய வாய்ப்புகள்இருப்பின்அவற்றை நிச்சயமாகப் பரிசீலிப்போம்.'' - என்று தெரிவித்தார். (ஐ)

## இளவாலையில் பொங்கல் கொண்டாட்டம்

*யாழ்ப்பாணம், ஜன.13*

*இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் ஆண்டு தோறும் இமாலய கொண்டாட்டமாக நடத்தப்படும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள், பட்டம் ஏற்றல் போட்டிகள், கலாசாரக் கலை நிகழ்வுகள் சகிதம் நடைபெறும் பொங்கல் விழா இந்த முறையும் பொங்கல் தினத்தன்று இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*காலை 9 மணிக்கு காங்கேசன்துறை வெளிச்சவீட்டருகே உள்ளபட்ட மேற்றுத் திடலில் பட்ட மேற்றல் போட்டிகளும், பிற்பகல்ஒருமணிதொடக்கம் வாலிபத்திடலில் சிறுவர்களுக்கான போட்டிகள், சறுக்குமரம் ஏறுதல், தயிர்முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, கயிறுழுத்தல், கிடுகு பின்னுதல், சாக்கு ஓட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளன.*


*அன்று மாலை 4 மணிக்கு பாரம்பரிய முறைப்படி ஆரோகணா கலைக் குடும்பத்தில் இசைப் பறைகள், கொம்புகள் முழங்க, விருந்தினர் வரவேற்பு இடம் பெற்று, கலை, கலாசார நிகழ்வுகள்இடம்பெறும்.*

*இந்த முறை விசேடமாக 'நேத்திரம்'சஞ்சிகை வெளியீட்டு விழாவும், அதிஷ்டலாபச் சீட்டின் அதிஷ்டம் பார்க்கும் நிகழ்வும் இடம்பெற உள்ளன.*

*இந்தநிகழ்வில்பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமனாதனும், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் சிவலிங்கராஜாவும், கௌரவ விருந்தினராக வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா, யாழ். மாவட்ட ரயில்வே அதிகாரி ஜெயதாசன், மதுசாரத்துக்கு எதிரான இளைஞரணி தலைவர் பிறேமராஜா ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ)*

## முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டோரின் சிகிச்சைக்கு

# 45 ஆயிரம் டொலர் நிதியுதவி வழங்கிய பிரம்ரன் மக்கள்



கொழும்பு, ஜன.13

வடக்கில் முள்ளந்தண்டு பாதிப்புற்றவர்களுக்காக பிரம்ரன் மாநகர மக்களால் 45 ஆயிரம் டொலர் நிதியுதவி வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கனடா பிரம்ரன் மாநகர சபைக்கும் வவுனியாவுக்குமான உறவுப் பாலத்தின் முதலாவது சந்திப்பின் போது இந்த நிதி கையளிக்கப்பட்டுள்ளது.

பிரம்ரன் மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் நூற்றுக் கணக்கான பிரம்ரன் வாழ் தமிழ் உறவுகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்துகொண்ட முதலமைச்சர் மாநகர வளாகத்தில் சிறப்புரையை ஆற்றியதோடு, அங்கு கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களோடும் வடமாகாணத்தின் நிலைப்பாடு குறித்து எடுத்துக் கூறியிருந்தார்.

இதன்போதுவடக்கில்முள்ளந்தண்டு பாதிப்புற்றவர்களுக்காக பிரம்ரன் மாநகர மக்களால் 45 ஆயிரம் டொலர் நிதியுதவி முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கனடாவில் நாளை மறுதினம் 15 ஆம் திகதி மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

தாயக மக்களின் சமகால நிலை குறித்து விரிவான உரையை வழங்கவிருக்கும்முதலமைச்சர்பொதுமக்களின் வினாக்களுக்கும் அங்கு பதில் கூறவுள்ளார்.

இந்தக் கூட்டத்துக்குக் கனடா வாழ் பொதுமக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## போலி 5 ஆயிரம் ரூபா தாள்கள் களுத்துறையில் மீட்பு!

### 55 தாள்களுடன் இருவர் கைது

கொழும்பு, ஜன.13

போலி 5 ஆயிரம் ரூபா நாணயத் தாள்களுடன் இரண்டு பேர் களுத்துறை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். களுத்துறை குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை கெலிடோ சந்திப் பிரதேசத்தில் 5 ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் இரண்டை வைத்திருந்த ஒருவர்கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மற்றைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இரண்டாவது நபரிடம் இருந்து 55 போலி 5 ஆயிரம் ரூபா நாணயத் தாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் வடக்கு களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார். (ஐ)

## திருவாசக முற்றோதல்

ஊரெழுஸ்ரீபர்வதபத்தினி அம்பாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மணிவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.சிவத்திரு நா. முருகையாதலைமையில்ஊரெழு கவிமணி அன்னதாஸன் குழுவினரால் திருவாசகம் ஓதப்படவுள்ளது.மார்கழி இறுதி முற்றோதலாக இது இடம்பெறவுள்ளது. (ஐ)

வேலை வாய்ப்பு - உடனடியாக தேவை

**அலுவலக பணிப் பெண்**

உடனே நேரில் சமுகமளிக்கவும்

NORTH LANKA IIT
TOP FLOOR, PEOPLE'S BANK BUILDING
STANLEY ROAD, JAFFNA

## வவுனியாவில் 10 ஆயிரம் பொருத்து வீடுகள் அமைக்கப் பயனாளிகளுக்கு விண்ணப்பம்

வவுனியா மாவட்டத்தில் 10 ஆயிரம் பொருத்து வீடுகளை வழங்குவதற்கு விண்ணப்பப் படிவத்தைக் கிராம சேவையாளர்கள் தமது பகுதிகளில் விநியோகம் செய்து வருகின்றனர்.

ஒவ்வொரு கிராம சேவையாளர்களின் ஊடாக வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத விவகார அமைச்சால் இந்த விண்ணப்பப் படிவங்கள் அரச அதிபரின்சிபார்சுக்கு அமைவாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கிராம சேவையாளர்களுக்கு இது தொடர்பாக விளக்கம் அளிக்கும் கலந்துரையாடல் கடந்த வாரம் வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் பிரதேச செயலர் மற்றும்கிராமசேவையாளர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட இணைப்பாளர்கள் பொருத்து வீடு தொடர்பான விளக்கத்தை கிராம சேவையாளர்களுக்கு அளித்தனர்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்திக் கையளிக்கும் இறுதித் திகதி இன்றாகும். 10ஆயிரம்வீடுகளில் செட்டிகுளம் பிரதேச செயலகம், வவுனியா வடக்கு பிரதேச செயலகம், வவுனியா தெற்கு பிரதேச செயலகம் மற்றும் வவுனியா நகரம் போன்ற பகுதிகளில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளர் எம்.எம். சிவலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## சர்வதேச கிரிக்கெட் மைதானம் யாழ்ப்பாணத்தில் அமையும் வாய்ப்பு

யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சம்பந்தமான மிக முக்கிய கூட்டம் ஒன்று இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.

இதற்காக 'ஶ்ரீலங்கா கிரிக்கெட்' அமைப்பின் மூத்த அதிகாரிகள் குழு யாழ். வருகின்றது. அந்த அமைப்பின் தலைவரும், உப சபாநாயகருமான திலங்க சுமதிபாலவும் இன்று யாழ். வரும் குழுவில் இடம்பெறுகின்றார் என்பது நல்ல செய்தி.

அவர் முன்னர் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (அதுவே இப்போது 'ஶ்ரீலங்கா கிரிக்கெட்' அமைப்பாகப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.) தலைவராக இருந்தபோது - பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் - ஒற்றைக்காலில் பிடிவாதமாக நின்று - தம்புள்ளவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைத்தார். அந்த அமைப்புத் தொடர்பான விவகாரங்களில் ஊழல்கள் இடம்பெற்றன என அவ்வப்போது குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டபோதும், அப்பிரதேசத்துக்குத் தரமான சர்வதேசக் கிரிக்கெட் மைதானம் ஒன்று இப்போது கிடைத்துவிட்டது என்பது இலங்கையின் கிரிக்கெட் தர மேம்பாட்டுக்கு முக்கியமான வரப்பிரசாதமாகும்.

பலத்த இடர்ப்பாடுகள், பின்னடைவுகள், நெருக்கடிகளுக்கு மத்தியில் உப சபாநாயகர் திலங்க சுமதிபால மீண்டும் இலங்கைக் கிரிக்கெட் அமைப்புக்கும் தலைவராகியுள்ளார். அவரது அந்த வெற்றிக்கு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கமும் உதவியது. அவர், தலைவரான கையோடு தனது அடுத்த பிரதான திட்டம் யாழ்ப்பாணத்தில் ஒரு சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானத்தை அமைத்தல் என்று அறிவித்திருக்கின்றார். அந்த யோசனைக்கு விளையாட்டுத் துறை அமைச்சினதும் ஜனாதிபதியினதும் ஆசீர்வாதமும் இருப்பதாகத் தெரிகின்றது.

ஆகவே, இந்த அறிவிப்பையும், வாய்ப்பையும் யாழ்ப்பாண மாவட்டக் கிரிக்கெட் சங்கம் சமயோசிதமாகவும், சாணக்கியமாகவும் பற்றிக் கொண்டு, விடயத்தை மளமளவென ஒப்பேற்றி முடிக்க முயற்சிக்க வேண்டும்.

சரியாக இருபது ஆண்டுகளுக்கு முன்னர் - யுத்தம் தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில்தான் - யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் உருவாக்கப்பட்டது.

இராணுவத்துடன், பாடசாலை கிரிக்கெட் அணி ஒன்று சினேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டத்தில் பங்குபற்றிய செயலுக்காக, யாழ்ப்பாணத்தின் அந்தப் பிரபல பாடசாலையின் புகழ்பூத்த அதிபர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் இங்கு விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் மிக எச்சரிக்கையாகவே முன்னெடுக்கப்பட்டன. அதுவும், அச்சமயத்தில் தென்னிலங்கையில் தேசிய மட்டத்தோடு விளையாட்டுத் தொடர்பாடலைப் பேணுவது ஆபத்தானதும் சிக்கலானதுமாக இருந்தது.

அத்தகைய ஒரு சூழலில்தான் - யாழ்ப்பாணத்தைப் போராளிகளிடமிருந்து இராணுவம் மீளக் கைப்பற்றியதாகக் கூறிக்கொண்டு, அது இங்கு சிவில் நிர்வாகத்தில் நேரடியாகத் தலையீடு செய்த அந்தச் சமயத்தில்தான் - குடாநாட்டில் போராளிகளின் பிரசன்னமும், செயற்பாடுகளும் தாராளமாக இருந்த அந்த 'இரண்டும் கெட்டான்' வேளையில்தான் - யாழ். மாவட்டத்தை, தேசிய கிரிக்கெட்டுடன் இணைக்கும் உத்தேசத்தில், யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தை உருவாக்கும் அந்தத் துணிச்சலான முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மட்டத்தில் கிரிக்கெட் ஊடாட்டத்தை ஏற்படுத்தும் அந்த முயற்சி அவ்வேளையில் வன்னியில் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்படாமல் இருப்பதற்காக, யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயற்பாடுகள் கத்தியில் நடப்பது போல அமைந்தன. எனினும் விக்கினமின்றி செயற்பாடுகள் தொடர்ந்தன.


யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்துக்கு அச்சமயத்தில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் உடனடியாக அங்கத்துவம் வழங்கக் காரணமாக இருந்தவர் அப்போது கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக இருந்த திலங்க சுமதிபாலதான். அவரே இப்போது பெயர் மாற்றம் பெற்ற 'ஶ்ரீலங்கா கிரிக்கெட்' அமைப்பின் தலைவராக, இலங்கையின் மற்றொரு சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானத்தை யாழ்ப்பாணத்தில் அமைக்கும் எண்ணத்துடன் இங்கு வருகின்றார்.

இந்த எண்ணம் ஈடேறுமானால் வடக்கிலும் - யாழ்ப்பாணத்திலும் - சர்வதேச டெஸ்ட் போட்டிகள் உட்பட முதல்தர ஆட்டங்கள் நடைபெறும். யாழ்ப்பாணத்தின் கிரிக்கெட் தரம், வசதி என்பன மேம்படும். உல்லாசப் பயணத்துறையும் விருத்தியடையும்.

கிரிக்கெட் விளையாட்டைப் பொறுத்த வரை யாழ். குடாநாட்டு வீரர்கள், தென்னிலங்கைக்குச் சளைத்தவர்கள் அல்லர். ஆனால் அந்த விளையாட்டில் தேசிய மட்டத்தில் மேம்படுவதற்கான வாய்ப்புகள் தென்னிலங்கையுடன் ஒப்பிடுகையில் இங்கு மிக மிகப் பின்னடைவாகவே உள்ளது. அதுவே இத்துறையில் நமது வீரர்கள் பிரகாசிக்க இயலாமைக்குப் பிரதான காரணம்.

போதிய புற்தரை ஆடுகளங்கள், உரிய பயிற்சி மற்றும் போதனை வசதிகள் இல்லாமை, கிரிக்கெட் ஆட்ட வாய்ப்புகள் குறைவு, உபகரணங்கள் - பயிற்சியாளர்கள் பற்றாக்குறை, வீரர்களுக்கான ஊக்குவிப்பு வாய்ப்புகள் முற்றாக இல்லை... இப்படி இந்த விளையாட்டுத்துறை இங்கு எதிர்நோக்கும் சவால்கள் அநேகம்.

இன்றைய கலந்துரையாடல் இந்தச் சிக்கல்களைத் தாண்டுவதற்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் ஆக்கபூர்வமாக அமைய வேண்டும். அதை அப்படி வசமாகப் பயன்படுத்திக் கொள்வது யாழ். கிரிக்கெட் நிர்வாகிகளின் சாணக்கியத்தில் தான் தங்கியுள்ளது.




# தற்போதைய அரசைக் கவிழ்த்து மஹிந்த தலைமையில் ஆட்சி!

## அமைப்போம் என பிரசன்ன ரணதுங்க எம்.பி. சூளுரை

கொழும்பு, ஜன.13

தற்போதைய அரசைக்கவிழ்ப்பது மாத்திரமல்ல மஹிந்த தலைமையில் மக்களுக்குச் சார்பான அரசை அமைப்போம் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க சூளுரைத்துள்ளார்.

மினுவாங்கொடையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு;

''ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை 2020 ஆம் ஆண்டு மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதானது நாட்டின் ஆட்சியை மீண்டும் ஒரு முறை ஐக்கிய தேசியக் கட்சியிடம் கொடுப்பதாகும்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இதுதான் நடைபெற்றது. கீழ் மட்டத்தில் இருக்கும் கட்சியினரை இதுவரை வென்றெடுக்காத ஜனாதிபதி சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தினால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக மோதும் திறனை ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இழக்கும்.

மூன்று வருடங்களுக்கு பின்னர் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிக்க இன்னும் காலம் இருக்கின்றது.

இந்த வருடம் முக்கியமான ஆண்டு. நாட்டு வளங்களை விற்று, பட்டப்பகலில் கொள்ளையிடும் இந்த அரசை வீட்டுக்கு அனுப்பும் வருடம் இந்த வருடம். இந்த ஆண்டு அரசைக் கவிழ்க்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுவருடம் ஆரம்பிக்கும்போது கூறியிருந்தார்.

மஹிந்த என்பவர், 17 வருட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை அகற்றப் பாத யாத்திரை, ஜனகோஷா, மனித சங்கிலி போன்ற போராட்டங்களுக்குத் தலைமை தாங்கிய தலைவர். தற்போதைய அரசை ஆட்சியில் இருந்து அகற்றும் பலமிக்க ஒரே தலைவர் மஹிந்த ராஜபக்ஷ என்பது அனைவரும் அறிந்ததே.

இதேவேளை மைத்திரி - ரணில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் போராட்டத்தை எதிர்வரும் 27 ஆம் திகதி நுகேகொடையில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிப்போம். அரசைக் கவிழ்ப்பது மாத்திரமல்ல மஹிந்த தலைமையில் மக்களுக்குச் சார்பான அரசை அமைப்போம்.

எப்படி அரசைக் கவிழ்ப்பது எனப் பலரும் கேட்கின்றனர். அதனை நாங்கள் சரியான நேரத்தில் செய்து காட்டுவோம்.

மஹிந்த ராஜபக்ஷ கூறுவது போல் பின்னால் இருந்து கத்தியால் குத்த நாம் தயாரில்லை. மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கி ஜனநாயகப் பயணத்தின் மூலம் இந்த அரசைக் கவிழ்ப்போம்.''-என்றார். (எ)

# வில்பத்து பிரச்சினையை மீண்டும் கிளறிவிட்ட அரசு

## அம்பாந்தோட்டை சர்ச்சையை மூடி மறைக்கவே என்கிறார் நிஷாந்த எம்.பி.

கொழும்பு, ஜன.13

அம்பாந்தோட்டை முதலீட்டு வலயம் அமைக்கும் விடயத்தை மூடி மறைப்பதற்காகவே வில்பத்துப் பிரச்சினையை மீண்டும் அரசு கிளறிவிட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த குற்றம் சாட்டியுள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சிகளின் ஊடக மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

''அம்பாந்தோட்டை முதலீட்டு வலயம் அமைக்கும் பிரதேசத்தை அரசு சீனாவுக்கு நீண்டகால குத்தகைக்குக் கொடுத்துள்ளமை நாட்டின் இறைமையை மீறும் செயலாகும்.

எனது அரசு இந்த நாட்டிலே இறைமையைக் கொண்டு வருவதற்காகவும், ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துவதற்காகவும் பல்லாயிரம் இளைஞர்களின் உயிர்களை இழந்து, பட்ட கஷ்டங்களை நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள். கடந்த தேர்தலில் வெளிநாட்டுச் சக்திகளின் சதிகளாலும், கூட இருந்தவர்கள் குழிபறித்ததாலும் தற்காலிகமாகத் தோல்வி கண்டோம்.

எனினும் அது நிரந்தரத் தோல்வியல்ல. நாம் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறுவோம். விட்ட பிழைகளைச் சரி செய்து இந்த நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வோம். இதில் நீங்கள் நம்பிக்கை வையுங்கள்.

முஸ்லிம்கள் வில்பத்தை அழிக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக் கொள்ளவில்லை, அவர்கள் பழைய இடத்திலேயே குடியேறுகின்றார்கள்.

தற்போது மீண்டும் முஸ்லிம்களின் ஆதரவு எமக்குக் கிடைத்து வருகிறது, முஸ்லிம் மதத்தலைவர்கள் பலர் எம்மைச் சந்தித்து தாங்கள் விட்ட தவறை நினைத்துக் கவலைப்படுகின்றார்கள். அதேபோல எங்கள் பக்கத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்காக நான் அவர்களிடம் வருத்தம் தெரிவித்தேன்.''-என்றார். (எ)

### நாளை

14.01.2017
சனிக்கிழமை
நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ 02.02 வரை
திதி: துதியை பி.ப 03.43 வரை
சுபநேரம் : 03.34 – 05.04 வரை
இராகுகாலம் : 09.34 – 11.04 வரை

# கடுமையான நிபந்தனை அடிப்படையிலேயே இலங்கைக்குக் கிடைத்தது ஜி.எஸ்.பி. பிளஸ்

கொழும்பு, ஜன.13

கடுமையான நிபந்தனைகள் மற்றும் கண்காணிப்புடன் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஆணையம் வழங்கியுள்ளது.

இலங்கையின் மோசமான மனித உரிமைகள் நிலையால், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் 2010 ஆம் ஆண்டில் ரத்துச் செய்திருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அனைத்துலக சமூகத்துடன் கடைப்பிடிக்கப்பட்ட முரண் நிலை மற்றும் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகளால் இதனை மீளப் பெற முடியாத நிலை ஏற்பட்டது.

எனினும், 2015 இல் தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெறுவதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டது.

இதன் அடிப்படையிலேயே, நிபந்தனைகள் மற்றும் கண்காணிப்புடன், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் வழங்க இணங்கியுள்ளது ஐரோப்பிய ஆணையம்.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்டுள்ள மனித உரிமைகள் மற்றும் ஆட்சிமுறைகளில் ஏற்பட்டுள்ளமுன்னேற்றங்களின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், மனித உரிமைகள், தொழிலாளர் பிரகடனங்கள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, நல்லாட்சி உள்ளிட்ட 27 விடயங்களை நடைமுறைப்படுத்தும் முக்கியமான நிபந்தனைக்கு இலங்கை இணங்க வேண்டும் என்று ஐரோப்பிய ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

எனினும், இந்தச் சலுகையை மீள வழங்குவதனால், இலங்கை 27 அனைத்துலக பிரகடனங்களை முற்றிலும் திருப்தியளிக்கும் வகையில் மதித்துச் செயற்படுகிறது என்று அர்த்தமில்லை என்றும் ஐரோப்பிய ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை நடைமுறைக்கு வருவதற்கு இன்னும் நான்கு மாதங்கள் செல்லும். இந்த முடிவுக்கு எதிர்ப்புகள் இருந்தால், இந்தக் காலப் பகுதியில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அதனை முன்வைக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மீள வழங்கப்பட்டாலும், நிலையான அபிவிருத்தி, மனித உரிமைகள், நல்லாட்சிபோன்றவிடயங்களில் தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என்றும் ஐரோப்பிய ஆணையம் எச்சரித்துள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தையாக விளங்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு, இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் மூன்றில் ஒரு பங்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

2015 இல், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்கும் இடையில் 470 கோடி யூரோவுக்கு இரு தரப்பு வர்த்தகம் இடம்பெற்றது. இதில் இலங்கையில் இருந்து 260 கோடி பில்லிய்ன் யூரோவுக்கு ஏற்றுமதிகள் செய்யப்பட்டிருந்தன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை தற்போது ஆர்மேனியா, பொலிவியா, கேப் வேர்டே, கிர்கிஸ்தான், மொங்கோலியா, பாகிஸ்தான், பரகுவே, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யோகாசனமும் தளர்வு பயிற்சியும்

யாழ்ப்பாணம், ஜன.13


ஓம் பதஞ்சலி யோக கேந்திரா நிலையத்தால் உடல், உள ஆரோக்கியத்துக்கான யோகாசன தளர்வுப் பயிற்சி வகுப்புக்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை பயிற்சிகள் இடம்பெறும்.

இந்தப் பயிற்சி நெறியைப் பாடசாலை மட்டத்திலோ, அலுவலக மட்டத்திலோ செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம் என்று பயிற்சி ஆசிரியர் ந. கோணேஸ்வரர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மனித உரிமை பாதுகாக்கப்பட்டதால் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை கிடைத்தது

### பிரதமர் ரணில் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன.13

மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் ஜனநாயகத்தை மீள் நிலைப்படுத்தியதன் மூலமே, இலங்கைக்கு மீண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை கிடைத்துள்ளது.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குக் கடுமையான நிபந்தனைகள் மற்றும்கண்காணிப்புடன் மீண்டும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை, வழங்க ஐரோப்பிய ஆணையம் முடிவு செய்துள்ளமை குறித்துப் பிரதமர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையிலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மனித உரிமைகள் பாதுகாப்பு, ஜனநாயகத்தை மீள்நிலைப்படுத்தல் ஆகியவற்றில் இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றியதால் தான், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மீண்டும் கிடைப்பது சாத்தியமாகியது.

இது நல்லாட்சி அரசின் வெற்றி மாத்திரமல்ல, நாட்டுக்கே கிடைத்துள்ள வெற்றி.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மீண்டும் கிடைத்துள்ளதன் மூலம் இலங்கையின் ஆடை உற்பத்திகளும், ஏனைய உற்பத்திகளும், ஐரோப்பிய சந்தைக்குள் நுழைய முடியும். இதனால் வேலை வாய்ப்புகளும், வருமானமும் அதிகரிக்கும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளப் பெறுவதற்கு பணியாற்றிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.- என்றுள்ளது. (ஐ)

# புதிய கலாசார அதிகார சபை யாழ். மாவட்டத்துக்குத் தெரிவு



யாழ்ப்பாணம், ஜன.13

யாழ். மாவட்ட கலாசார அதிகார சபை அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், மாவட்ட காலாசார அதிகாரசபை உத்தியோகத்தர், யாழ். மாவட்டக் கலைஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது யாழ். மாவட்ட கலாசார அதிகார சபையின் தலைவராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் செந்தில் நந்தனன் தெரிவு செய்யப்பட்டார். யாழ். அரச அதிபர், சபையினரின் விருப்புடன் அவரைத் தெரிவு செய்தார்.

இதன்போது, மாவட்ட கலாசார அதிகாரசபை, பிராந்திய கலாசார அதிகாரசபை, பிராந்திய கலாசார அதிகாரசபை ஆலோசனைக்குழு போன்றனவும் தெரிவு செய்யப்பட்டது.

இந்தச் சபைகளுக்கான நிர்வாக உறுப்பினர்களும் இதில் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் குழுக்களின் ஊடாக யாழ்ப்பாணத்தில் உள்ளகலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய ரீதியாக விருதுகளுக்கு சிபாரிசு செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது இந்த வருடத்துக்கான அபிவிருத்திகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# ரூ. 87 லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் 2 இந்தியர்கள் கைது!

கொழும்பு, ஜன.13

87 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா கடத்தி வந்த இரண்டு இந்தியர்களை காங்கேசன்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தமிழ்நாடு, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் மொத்த நிறை 50 கிலோ என்றும், அதன் பெறுமதி 87 லட்சத்து 50 ஆயிரம் ரூபா எனவும் காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு இந்தியர்களையும் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



# கலந்தாய்வுச் செயலணியின் அறிக்கையை நிராகரித்த சம்பிக்க



கொழும்பு, ஜன.13

நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணியின் அறிக்கையை நிராகரித்துள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க, இந்த அறிக்கை குப்பைக் கூடைக்குள் வீசப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கலந்தாய்வு செயலணியின் பரிந்துரைகள், தேசிய நலனுக்கும், இன நல்லிணக்கத்துக்கும் விரோதமானவை.

செயலணியின் பரிந்துரைகளின் மூலம், போர்க் குற்றங்களுக்காக எமது போர் வீரர்களையும், அரசியல் தலைவர்களையும் விசாரிக்க வெளிநாட்டு நீதிபதிகளை அனுப்ப ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் முயற்சிக்கக் கூடும்.

மஹிந்த ராஜபக்ஷ 12 ஆயிரத்து 600 விடுதலைப் புலிகளைப் போர்க் குற்றங்களுக்காகத் தண்டிக்காமல் விடுவித்தமை பெரிய தவறாகும்.

செயலணியின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினால், எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளுக்கும் அவர்களின் அனுதாபிகளுக்குமே அது நன்மையளிப்பதாக இருக்கும்.- என்றார். (ஐ)

### கடந்த இரு வாரங்களாகத் தேடப்பட்டு வந்த

# எஞ்சிய 4 கல்முனை மீனவர்களும் மாலைதீவில் பாதுகாப்பாக மீட்பு

காணாமற்போய் கண்டுபிடிக்கப்படாமல் இருந்த ஏனைய நான்கு கல்முனை மீனவர்களும் மாலைதீவு கடலோரப் பாதுகாப்புப் பிரிவினரால் நேற்று அதிகாலை மாலைதீவு வடக்கு கடற்பிரதேசத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் கடந்த 24 ஆம் திகதி கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று காணாமற்போன நிலையில், இரண்டு மீனவர்கள் மாலைதீவு மீனவர்களால் கடந்த புதன்கிழமை மீட்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மாலைதீவு சென்று, அந்நாட்டு உப ஜனாதிபதி அப்துல் ஜிஹாத் மற்றும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஆதம் சரீப் ஆகியோருடன் கலந்துரையாடி ஏனைய நான்கு மீனவர்களையும் தேடும் பணியைத் துரிதப்படுத்தியிருந்தார்.

இதன்விளைவாக மாலைதீவு கடலோர பாதுகாப்புப் படையினரால் இந்த நான்கு மீனவர்களும் மீட்கப்பட்டு, மாலைதீவில் கரைசேர்க்கப்பட்டுள்ளனர். தற்போது இந்த மீனவர்கள் மாலைதீவில் பாதுகாப்பாக இருக்கின்றமையை அந்நாட்டு அரச அதிகாரிகள், இலங்கை விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரைத் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தியுள்ளனர். (ச)

# சந்திவெளி பகுதியில் சமையலறை தீக்கிரை



மட்டக்களப்பு சந்திவெளிப் பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் தீ பரவியதன் காரணமாக அந்த வீட்டின் சமையல் அறை முற்றாக எரிந்து தீக்கிரை ஆகியுள்ளது.

சந்திவெளி கண்ணகி அம்மன் வீதியிலுள்ள வீட்டின் உரிமையாளர் வர்த்தக நிலையத்துக்குச் சென்றிருந்த வேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் சமையலறைக் கூரையிலிருந்து புகை வருவதை அவதானித்த அயல் வீட்டார், சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளருக்கு அறிவித்தனர். இதனை அடுத்து இராணுவத்தினரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் சம்பவ இடத்துக்கு நேரில் சென்றுபார்வையிட்டார்.

தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர் . (ச)

# நல்லாட்சி அரசு மீதான நம்பிக்கை இன்னும் அற்றுப் போகவில்லை

### நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவிப்பு

கூச்சலிடும், கொக்கரிக்கும் இனவாத அரசியல் போக்கைக் கைவிட்டு பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கு நீதியான- நியாயமான- நிரந்தரமான - தீர்வை வழங்குவதற்கான பாதையில் நல்லாட்சி அரசு பயணிக்கும் என்ற நம்பிக்கை இன்னும் எமக்கு அற்றுப் போகவில்லை.

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான பங்களிப்புத் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலத்தில் அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகம் தனக்கான தீர்வைப் பெற்றுக்கொண்டு, இன்னுமொரு இனத்தை அடக்கி ஆள முற்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் அதனை ஏற்றுக் கொள்ளாது.

தமிழ், முஸ்லிம் இனங்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் இணையும் போதே, பெரும்பான்மையினரிடம் இருந்து பெறும் தீர்வு நிரந்தரமானதாக அமையும். இதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கை முஸ்லிம் காங்கிரஸும் புரிந்துணர்வுப் பேச்சை ஆரம்பித்துள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மொழிவாரியான பிரதேசமாக இருக்க வேண்டும் என்பது எமது அசையாத நம்பிக்கையாகும். இதனால், இந்த இரு சமூகங்களுக்கு இடையிலும் பரஸ்பர நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்துவது தலையாய கடமை என்று நினைக்கின்றேன்.

தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் ஆகிய அனைத்து இனத்தவர்களும் சமத்துவத்துடன் வாழ நினைப்பது மிகப் பொருத்தமானதே. இதனால், பேச்சு மூலமாகப் புரிந்துணர்வை ஏற்படுத்தி விடயங்களை முன்னகர்த்துவது நிரந்தர சுபீட்சத்துக்கு வழிவகுக்கும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவருடன் இரண்டு பிரதான கட்சிகளும் நியாயமான சிந்தையுடன் செயற்படும் பட்சத்தில் நாடு முன்னேற்றம் அடையும்.- என்றார். (ச)

# பாலையூற்றில் நகைகள் திருட்டு

திருகோணமலை,ஜன.13

திருகோணமலை பாலையூற்றுப் பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் சுமார் 17 லட்சத்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டுப் போயுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை வீட்டில் எவரும் இல்லாத வேளையில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெளியில் சென்று வீடு திரும்பியவர்கள், வீட்டின் யன்னல் உடைக்கப்பட்டு நகைக்ள் திருடப்பட்டிருந்தமையை அவதானித்து, திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

# ஏறாவூர் இரட்டைக்கொலை வழக்கு அறுவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

ஏறாவூர்,ஜன.13

ஏறாவூரில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அறுவரையும் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வி உத்தரவிட்டுள்ளார்.

ஏறாவூர், முகாந்திரம் வீதியில் வசித்து வந்த நூர்முஹம்மது ஹுஸைரா (வயது-56) அவரது திருமணமாகிய மகளான முஹம்மது யூசுப் ஜெஸீரா பானு (வயது-32) ஆகியோர் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட அறுவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் இச்சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர். இதன்போதே இவர்களுக்கான விளக்கமறியல் நீடிக்கப் பட்டது. (ச)

# புதையல் தோண்டியோருக்கு அபராதம்

புல்மோட்டை எலந்தைக்குளம் காட்டுப்பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட 9 பேருக்கு, திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க, தலா 90 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

யான் ஓயாவை அண்டிய எலந்தைக்குளம் காட்டுப் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் இந்த 9 பேரும் கடந்த டிசெம்பர் 12 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில் இச்சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே இவர்களுக்கான அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த சந்தேக நபர்கள் அவிஸாவளை, மாத்தறை, மஹரகம, கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(ச)

### மட்டு. கோட்டைமுனைப் பகுதியில்

# நுளம்புகள் பெருகும் சூழல் 12 பேருக்கு எதிராக வழக்கு

மட்டக்களப்பு,ஜன.13

மட்டக்களப்பு மாநகர சபைப் பிரிவுக்கு உட்பட்ட கோட்டமுனைப் பிரதேசத்தில் நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் சுற்றுச்சூழலை வைத்திருந்த 12 பேருக்கு எதிராக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.அமுதமாலன்தெரிவித்தார்.

மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார், மாநகர சபை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், கோட்டமுனைப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்றுமுன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, 210 வீட்டு வளவுகள் மற்றும் அதனை அண்டிய இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்த 12 பேர் அடையாளம் காணப்பட்டனர். (ச)

# ஆஸ்திரேலிய அரசின் நிதி உதவியுடன் கிழக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி

### முதலமைச்சர் நஸீர் தெரிவிப்பு

ஆஸ்திரேலிய அரசின் நிதி உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

கிழக்கின் சுற்றுலாத்துறையை சகல துறைகளிலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின் அங்குரார்ப்பணம் நேற்று முன்தினம் புதன்கிழமை கிழக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் இடம்பெற்றது.

ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகரின் உத்தயோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பிரயிஸ் ஹட்செசன் மற்றும் திறன் அபிவிருத்தி, தொழிற் பயிற்சி அமைச்சர் மஹிந்த சமரசிங்ஹ ஆகியோரும் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான தொழிற்திறன் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தனர்.

கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தத் திட்டத்தில் கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளது.

உணவுப் பொருள் விநியோகத்தர்கள், கலைஞர்கள், மற்றும் விருந்துபசாரகர்கள், வதிவிட வழங்குநர்கள், வாடகை வாகன சாரதிகள், மாவட்ட திட்டமிடலாளர்கள், பூங்கா காப்பாளர்கள், கைத்தொழில் ஒருங்கிணைப்பாளர்கள், வர்த்தக சம்மேளனத்தினர் ஆகியோர் இதன் மூலம் நன்மையடைய உள்ளனர் என முதலமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## பொலிஸாருக்கு எதிராக 400 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜன.13

இலங்கைப் பொலிஸ் சேவைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு 400 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் பெரும்பாலானவை, சித்திரவதை மற்றும் ஏனைய சட்ட விரோத நடவடிக்கைகள் என்றும் குறிப்பிட்டுகின்றன.

இதுதவிர, குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு எதிராகவும் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடுகள் பல கிடைக்கப் பெற்றுள்ளன என்று கூறப்படுகின்றது.

குற்றப்புலனாய்வுப் பொலிஸார் சித்திரவதை முகாம் பேணுவது போன்று செயற்படுகின்றனர் என்றும் அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மேலும், நான்காவது மாடி என அறிமுகமாகியுள்ள குற்றப்புலனாய்வுப் பொலிஸ் பிரிவில், சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், அதற்கான சாட்சியங்கள் பல உள்ளன என மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் கூறப்படுகின்றது. (எ)

# இனவாத நோக்கிலேயே ஹோமகமவில் கைதிகளுக்கான விசேட நீதிமன்றம்

### தடுத்து நிறுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறார் அருட்தந்தை சக்திவேல்



கொழும்பு, ஜன.13

கைதிகளுக்கான விசேட நீதிமன்று இனவாத நோக்குடனேயே ஹோமகமவில் அமைக்கப்படுகிறது என்று தெரிவித்த அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்தந்தை சக்திவேல், அச்செயற்பாட்டைத் தடுப்பதற்கு தமிழ் மக்கள் பிரதிநிதிகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

''அரசு, அரசியல் நீதியான தீர்மானங்களை எடுத்து அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முன்வர வேண்டும். ஆனால் அரசியல் தீர்வு கானல் நீராக இருக்கும் இந்த நிலையில் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுமேயானால் தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்.

அரசியல் கைதிகள் தொடர்பில் அரசானது கடந்த வருடம் விசேட நீதிமன்று ஒன்றை கொழும்பில் அமைத்திருந்தது. அது கடந்த டிசெம்பர் மாதத்துடன் நிறுத்தப்பட்டது. தற்போது குறித்த விசேட நீதிமன்றை கொழும்புக்கு வெளியே உள்ள ஹோமகம என்ற பிரதேசத்தில் அமைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இது இனவாத நோக்குடன் மாற்றப்படுகிறது என்றே எமக்குத் தோன்றுகிறது. அதாவது கடந்த வருடம் அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றில் கைதிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதிகள் குறித்து கைதிகள் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருந் தனர். அது தொடர்பில் எந்தப் பதிலும் இதுவரை கிடைக்கவில்லை. இந்த நிலையில் விசேட நீதிமன்றை இனவாதிகள் உள்ள பிரதேசத்துக்கு மாற்றுவது நியாயமற்ற செயல்.

விசேட நீதிமன்றை கொழும்பு அல்லது வடக்கு, கிழக்கில் உள்ள யாழ்ப்பாணம் அல்லது வவுனியாவில் அமைக்க வேண்டும். அல்லது அநுராதபுரத்தில் உள்ள நீதிமன்றை இயங்க வைக்கலாம். அதை விடுத்து ஹோமகமவில் அமைப்பது எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள கைதிகள் சார்பில் வாதாடும் சட்டத்தரணிகள் தாம் அங்கு வழக்குகளுக்குச் செல்ல மாட்டார்கள் என்றும் அங்கு விசேட நீதிமன்றை அமைக்க வேண்டாம் என்றும் பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவனுக்கு கடிதம் மூலம் அனுப்பியுள்ளனர்.

மேலும் அந்தப்பகுதி இனவாதிகள் உள்ள பகுதி என்றும் அங்கு தமக்குப் பாதுகாப்பில்லை என்றும் அரசியல் கைதிகள் மற்றும் உறவி னர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் ஒவ்வொரு வழக்குக்கும் சென்று வருவதற்கான பொருளாதார வசதிகள் எவையும் இல்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வாறான நிலையில் அரசு ஏன் இந்த விசேட நீதிமன்றை ஹோமகமவில் அமைப்பதற்கு முயற்சிக்கின்றது? கைதிகளில் நலன் கருதி, எமக்கு இழைக்கப்படும் அநீதிகளை கருத்தில் கொண்டு, மக்கள் பிரதிநிதிகள் இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச வேண்டும், உடனடியாக இந்த விசேட நீதிமன்று அமைக்கும் செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.''- என்றுள்ளது. (எ)

## பாடசாலைப் பரீட்சைகள் நேர சூசிகள் வெளியீடு

கொழும்பு, ஜன.13

இலங்கையில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள பாடசாலைப் பரீட்சைகள் குறித்த நேர சூசிகள் பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

மேலும், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி இடம் பெறவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கல்விப் பொதுத்தராதரச் சாதாரண தரப் பரீட்சை டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## மகாவம்சத்தின் ஆங்கில பதிப்பு இன்று வெளியீடு

கொழும்பு, ஜன.13

இலங்கை வரலாற்றைக் கூறும் மகா வம்சத்தின் புதிய பதிப்பு ஒன்று இன்று வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜோர்ஜ் டெர்னினால் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட மகாவம்சப் பிரதியே இவ்வாறு இன்று வெளியிடப்படவுள்ளது.

மத்திய கலாசார நிதியத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

காலிகோட்டைத்துறைமுக அதிகாரசபையின் சுற்றுலா பங்களாவில் இன்று மாலை 5 மணிக்கு நூல் வெளியீட்டு நிகழ்வு நடை பெறவுள்ளது.

பிரதமரின் ஆலோசனைக்கு அமைய மகாவம்ச நூல் வெளியீடு நடைபெறவுள்ளது.

மஹாநாம தேரரால் பாளி மொழியில் எழுதப்பட்ட இந்த நூல் ஜோர்ஜ் டெர்னரினால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 24 நூற்றாண்டு வரலாற்று விடயங்கள் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையை ஆண்ட மன்னர்கள் பற்றிய விவரங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் பல முக்கிய அமைச்சர்கள் பங்கேற்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மகாவம்ச நூலின் உள்ளடக் கம் தொடர்பிலும் வரலாற்று விடயங்கள் தொடர்பிலும் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (எ)

## வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வதிவிட விசா

கொழும்பு, ஜன.13

இலங்கையில் முதலீடு செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வதிவிட விசா வழங்கத் தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறைந்தது 3 இலட்சம் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர்ளுக்கே இந்த வதிவிட விசா வழங்கப்படும் என்று நிதி அமைச்சர் கூறியுள்ளார். அவ்வாறு முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு 2 முதல் 5 வருட வதிவிட விசா வழங்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (எ)

## சூழல் மாசை தடுப்பதற்கானதே திறைசேரி அபிவிருத்திச் சட்டமூலம்

### கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்

கொழும்பு, ஜன.13

அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது சூழல் மாசடைவதைத் தடுப்பதற்காக கொண்டு வரப்பட்டதே திறைசேரி அபிவிருத்தி சட்டமூலம் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்:-

''அபிவிருத்தியின் போது ஏற்படுத்தப்படும் சூழல் மாசடைதலைத் தடுப் பதற்காகவே இந்த சட்ட மூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால் எதிர்க்கட்சியினர் மற்றும் அரசியல் விசமிகள் சிலர் ஒன்றிணைந்து மக்களைத் திசைதிருப்பும் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், எதிர்கால இளைஞர்களுக்காக மேற்கொள்ளப்படும் இவ்வாறான திட்டங்களைத் தடை செய்வது பாவச்செயல்.''- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

## சுருக்கிட்ட நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜன.13

பொகவந்தலாவ கிவ் மேற்பிரிவு தோட்டத்தில் 24வயது இளைஞர் ஒருவர் சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றதாக பொகவந்தலாவப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டில் எவரும் இல்லாத வேளையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் ஆறுமுகம் சத்தியராஜ் என்று தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து அந்த இளைஞனின் மரணத்தில் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளகையோடு இதுகொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)

## ஈரானிலிருந்து மருந்து வகைகளை இறக்குமதி செய்வதில் அரசு கவனம்

கொழும்பு, ஜன.13

ஈரானில் தயாரிக்கப்படும் மருந்து வகைகள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் என்பனவற்றை இலங்கைக்கு இறக்குமதி செய்வது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இது குறித்து இலங்கைக்கான ஈரான் தூதுவர் மொஹமட் சயிரி அமிரானி, அமைச்சர் ராஜித சேனாரட்ன ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடல் சுகாதார அமைச் சில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலை அடுத்து அமைச்சர் ராஜித சேனாரட்ன, ஈரானில் தயாரிக்கப்படும் மருந்து வகைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வது தொடர்பான வாய்ப்புக்கள் பற்றி கண்டறியுமாறு அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி ரூமிமர் ஸூக்குக்கு பணிப்புரைவழங்கியுள்ளார்.

இதேவேளை ஈரானிலிருந்து மருந்து தயாரிப்புத் தொழில் நுட்பம், மருந்துகளையும் இறக்குமதி செய்வது தொடர்பான ஒப்பந்தம் 2005ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டது. இதற்கமைய, 37 மருந்து வகைகளும், பத்து வகையான மருத்துவ உபகரணங்களும் இறக்குமதி செய்யப்பட இருந்தன. 2012 ஆம் ஆண்டில் இதேபோன்றதொரு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. ஈரான் தற்போது 40 நாடுகளுக்கு மருந்து வகைகளை ஏற்றுமதி செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

காலைக்கதிர் Kalaikkathir



# செட்டிக்குளத்தில் 87 வீடுகளுடன் உதயமாகிறது புதியதொரு கிராமம்





வவுனியா, ஜன.13

வவுனியா, செட்டிக்குளம், பெரியகுளம் பகுதியில் தேசிய வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் 'செமட்ட செவண' திட்டத்தின் கீழ் 87 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டு புதிய கிராமம் ஒன்று உதயமக உள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் அந்தப் பகுதியில் வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சின் நிதியுதவியில் வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வடக்கில் 50 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தின் ஓர் கட்டமாக செட்டிகுளம், பெரியகுளம் பகுதியில் புதிதாக காணி வழங்கப்பட்ட 87 பேருக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வாழ்ந்த நிலையில் காணிகளற்ற மற்றும் உப குடும்பங்களைச் சேர்ந்த 87 பேருக்கு செட்டிக்குளம், பெரியகுளம் பகுதியில் காணிகள் வழங்கப்பட்டிருந்தன. அந்த மக்கள் இந்தக் காணிகளில் குடியேறும் வகையில் இந்த வீட்டுத்திட்டம் வழங்கப்படுகிறது.

இந்தப் புதிய கிராமத்துக்கான வீட்டுத் திட்ட அடிக்கல் நடும் நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன், ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர்களில் ஒருவரான சிவலிங்கம், செட்டிக்குளம் பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் சந்திரமோகன், செட்டிகுளம் உதவிப் பிரதேச செயலர் முகுந்தன், கிராம அலுவலர் மற்றும் அந்தப் பகுதியில் குடியேறவுள்ள மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

## கிளிநொச்சியில் டெங்கு அபாய நிலை; மக்கள் விழிப்பாக இருத்தல் வேண்டும்!

### சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தல்

கிளிநொச்சி, ஜன.13

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் மிகத் தீவிரமாகப் பரவக் கூடிய அபாய நிலை அவதானிக்கப்பட்டுள்ள நிலையில் பொது மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் துறையினர் அறிவித்துள்ளனர்

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் பல மாவட்டங்களில் வேகமாகப் பரவிவரும் டெங்குக் காய்ச்சல் கிளிநொச்சி மாவட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வருடத்தின் முதல் ஏழு நாள்களில், கிராஞ்சி, சிவபுரம், மலையாளபுரம், அம்பாள்குளம், கணேசபுரம், வலைப்பாடு, கல்மடு ஏழாம் யுனிற், செல்வாநகர், விசுவமடு ஆகிய இடங்களிலிருந்து எட்டுப் பேர் டெங்குக் காய்ச்சல் காரணமாக கிளிநொச்சிப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காய்ச்சல் இரண்டு நாள்களுக்கு மேல் நீடித்தால் உடனடியாக அருகிலுள்ள அரச வைத்தியசாலைகளில் இரத்த மாதிரியைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

மாவட்டத்திலுள்ள கர்ப்பவதிகள், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள், முதியவர்கள் காய்ச்சல் ஏற்பட்டவுடன் அருகில் உள்ள அரச வைத்தியசாலையை நாடவும்.

அத்துடன் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களது வீடுகள் மற்றும்சுற்றுப்புறங்களில் புகையூட்டலை மேற்கொண்டு நோய் பரப்பும் நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

உங்களது வீடுகளில் அல்லது உறவினர் மற்றும் அயலவர் வீடுகளில் வசிக்கும் எவராவது டெங்குக் காய்ச்சல் காரணமாக எந்த ஒரு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றாலும், அவ்வாறு சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அடுத்து வரும் 24 மணிநேரத்தினுள் அந்த வீடுகள் மற்றும் சுற்றாடலில் புகையூட்டல் மேற்கொள்ளப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவ்வாறு புகையூட்டல் 24 மணிநேரத்தினுள் இடம்பெறவில்லை எனின் 0770212765 என்னும் இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடுசெய்யுங்கள்.

தற்போது டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் பொதுச் சுகாதாரப் பிரிவினர், பகுதிப் பிரதேச சபையினர், பொதுமக்கள் அமைப்புகள் மற்றும் முப்படையினர் களமிறங்கியுள்ளனர்.

வீடுவீடாகச் சென்று டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு அழித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாடசாலைகள் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்களைச் சுத்திகரித்தல் ஆகியநடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களோடு இணைந்து டெங்குநுளம்புகளை நிரந்தரமாகக் கிளிநொச்சி மண்ணிலிருந்து ஒழிப்பதற்கு அனைவரும் திரண்டு வாருங்கள். - என்றுள்ளது. (ஐ-70)

### நோயாளர்களுக்கான அறிவுறுத்தல்கள்

காய்ச்சல் காணப்படின்...

★ நோயாளிக்கு ஓய்வு வழங்கவும்.

★ கஷ்டப்படவோ பாரமான வேலைகள் செய்யவோ இடமளிக்கவேண்டாம்.

★ திரவவகைகளைப் பருகக் கொடுக்கவும். (பால், பழச்சாறு, தோடம்பழச்சாறு, ஜீவனி, இளநீர், சூப் போன்றன பொருத்தமானவை. தனியே நீரை மட்டும் கொடுக்க வேண்டாம்)

★ சிவப்பு அல்லது கபில நிறப்பான வகைகளைக் குடிக்கக் கொடுக்க வேண்டாம். (சிவப்பு நிற குளிர் பானம், கோப்பி)

★ நோயாளி சிறுநீர் கழிக்கும் தடவைகளின் எண்ணிக்கை பற்றி கவனத்தில் கொள்ளவும்.

★ நோயாளி சிறுநீர் கழிக்கும் தடவைகளின் எண்ணிக்கை குறைவாயிருப்பின் உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும்.

★ காய்ச்சல் காணப்படின் சாதாரண நீரால் உடலைக் கழுவவும்.

★ வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகளை வழங்கவும்.

★ காய்ச்சல் 2 நாள்களுக்கு மேலாகக் காணப்படின் மூன்றாவது தினத்தில் குருதிப் பரிசோதனை மேற்கொள்ளவும்.

★ பின்வரும் அறிகுறிகள் காணப்படின் நோயாளியை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கவும்.

- திரவ வகைகளைப் பருக முடியாதிருத்தல் (அடிக்கடி வாந்தயெடுத்தல்.)
- உணவு, பானவகைகளை நிராகரித்தல்.
- கடுமையான தாகம்.
- நோயாளி சிறுநீர்கழிக்கும் தடவைகள் குறைவடைதல் ( 6 மணித்தியாலத்துக்குக் கூடுதலான நேரம் சிறுநீர் வெளியேறாமை)
- கடுமையான வயிற்றுவலி.
- தூக்க நிலைமை.
- நடத்தையில் மாற்றம் ஏற்படல்.
- சிவப்பு, கறுப்பு, கபில நிற வாந்தியெடுத்தல்.
- கறுப்பு நிற மலம் வெளியாதல்.
- குருதிப்பெருக்கு.
- தலைசுற்றுதல்
- கை, கால்கள், குளிரடைதல்.

மேலதிக விவரங்களுக்கு 0770424870 - மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர் - கரைச்சி; 0778715724- மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர் - கண்டாவளை; 0776748256- மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர் - பளை; 0778715724 - மேற்பார் வைச் சுகாதாரப் பரிசோதகர் - பூநகரி ஆகியோருடன் தொடர்பு கொள்ளலாம் என்றுள்ளது.



## இரு ஓட்டோக்கள் மோதி விபத்து: வவுனியாவில் இருவர் படுகாயம்!

வவுனியா,ஜன.13

வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் வீதியில் இரு ஓட்டோக்கள் விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மறவன்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த ஓட்டோவைப் பின்புறமாக வந்த மற்றுமொரு ஓட்டோ மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இரு ஓட்டோச் சாரதிகளும் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-100)

## வவுனியா பிரதேச மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் சிரமம்

வவுனியா, ஜன.13

வவுனியாவில் கடும் வறட்சி நிலவுவதால் மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

செட்டிக்குளம் பாவற்குளம் 6 ஆம் யூனிட்டை அண்டிய பகுதியிலுள்ள பொதுக் கிணற்றில் வறட்சியின் காரணமாக நீர் வற்றியுள்ளது.

இதனால் இந்தக் கிணற்றில் குடி தண்ணீர் பெற்று வந்த மக்கள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

இந்த நிலையில் இந்தப் பொதுக் கிணற்றை ஆழமாக்கித் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.


அத்துடன் அந்த பகுதிக்கு குழாய் கிணறு ஒன்றையும் அமைத்துத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினரிடம் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# அரசியல் தீர்வுக்கு இதனை விட்டால் இனி வாய்ப்பு வராது!

**இலங்கையின் அரசியல் நிலைவரம் தொடர்பாக 'The Hindu' இதழில் மீரா சிறினிவாசன் எழுதிய இந்தக் கட்டுரையை 'புதினப் பலகை' இணையத்தளத்துக்காக மொழியாக்கம் செய்தவர் நித்தியபாரதி.**







சிறிலங்கா மக்கள் அதிபராக மைத்திரிபால சிறிசேனவையும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவையும் தேர்தல் மூலம் தெரிவு செய்து இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில், அரசியல் இருப்பு என்கின்ற பொறிக்குள் அகப் பட்டுத் தவித்த ஆட்சியை மீண்டும் ஜனநாயக ஆட்சியாக மாற்றுவதற்கான முயற்சிகளை தேசிய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

பத்து ஆண்டுகளாக சிறிலங்காவை ஆட்சி செய்து வந்த மஹிந்த ராஜபக்ஷவினதும் அவரது கொடுங்கோல் ஆட்சியிலிருந்தும், இந்த நாடானது ஜனவரி 09, 2015 அன்று விடுபட்டுக் கொண்டது. உயர் கண்காணிப்பு, தலையீடு, ஊடக அடக்குமுறை, ஜனநாயக நிறுவகங்களை தளர்வடையச் செய்தல் போன்ற பல்வேறு அடக்குமுறைகளை ராஜபக்ஷ அரசாங்கம் கைக்கொண்டது.

இந்த அரசாங்கத்தின் ஊழல் மற்றும் பாரபட்சங்கள் போன்றன இதன் அபிவிருத்தி முயற்சிகளில் மேலோங்கியிருந்தது. ராஜபக்ஷ தன்னால் ஈட்டப்பட்ட போர் வெற்றியை இதற்காகப் பயன்படுத்திக் கொண்டார். இந்தப் போர் வெற்றியைப் பயன்படுத்தி பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவை ராஜபக்ஷ பெற்றிருந்தார்.

ஆகவே, இந்நிலையில் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய புதியதொரு அரசியல் தலைமைத்துவத்திற்கான தேவை எழுந்தது. இதன் மூலமே தற்போது ஆட்சியிலுள்ள தேசிய அரசாங்கமானது நாட்டின் ஆட்சியைப் பெற்றுக் கொண்டது. அதாவது ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்துதல், நல்லாட்சியை மேலோங்கச் செய்தல் போன்ற பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியவாறு தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

கிராம மட்டச் சிங்கள மக்கள் தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கினர். ஆனால் அதே வேளையில் வடக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் மக்கள் ஆகியோரும் சில அனைத்துலக நாடுகளும் சிறிசேனவிற்கு தமது முழு ஆதரவையும் வழங்கினர். இவர்களின் ஆதரவுடன் ராஜபக்ஷவை சிறிசேன தேர்தலில் வெற்றி கொண்டார்.

இவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இதன் எதிர்க்கட்சியான விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து இந்த நாட்டின் முதலாவது தேசிய அரசாங்கத்தை உருவாக்கினர். இது சிறிலங்கா அரசியலில் பாரியதொரு மறு மலர்ச்சியை ஏற்படுத்தியது. இது மக்களுக்கும் நம்பிக்கை அளித்தது.

பிரதமர் விக்கிரமசிங்கவினால் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்ட ஒருவர் பாரிய கடன் பத்திர ஊழலில் ஈடுபட்டமை மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை உண்டு பண்ணிய போதிலும் தேசிய அரசாங்கமானது தனது முதலாவது ஆண்டு ஆட்சியில் மக்களின் நம்பிக்கையை ஓரளவு காப்பாற்றிக் கொண்டது. ஒகஸ்ட் 2015இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் தேசிய அரசாங்கம் வெற்றி பெற்றுக் கொண்டதன் மூலம் இந்த அரசாங்கமானது மக்களின் நம்பிக்கையைத் தனதாக்கியது.

நிறைவேற்று அதிபர் கொண்டுள்ள அதிகாரங்களைப் பரவலாக்குதல், ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு வழிவகுத்தல், நல்லிணக்கத்திற்கான முழுமையான மூலோபாயம் ஒன்றை உருவாக்குதல் போன்ற பல்வேறு மாற்றங்களைக் கொண்ட அரசியல் சீர்திருத்தம் ஒன்றை தேசிய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

நான்கு முனைகளைக் கொண்ட அணுகுமுறையை உருவாக்குவதாகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் தேசிய அரசாங்கம் உறுதி வழங்கியது. அத்துடன் புதிய அரசியல் யாப்பை வரையும் பணியையும் இந்த அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

பல தடவைகள் வடக்கு மாகாணத்திற்கு பயணம் மேற்கொண்ட அதிபர் சிறிசேன, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஒரு தொகுதி நிலங்களை விடுவித்து அவற்றை நில உரிமையாளர்களிடம் வழங்கியுள்ளார். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய கடப்பாட்டைத் தான் கொண்டுள்ளார் எனவும் சிறிசேன தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கமானது தனது இரண்டாம் ஆண்டு ஆட்சியின் போது பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது. இந்த நாட்டு பொருளாதாரமானது நலிவுற்றுள்ளதுடன் அரசாங்கத்திற்குள் இடம்பெறும் கூர்மையான அரசியற் பேதங்கள் வெளிப்படையாகக் காண்பிக்கப்படுகின்றன. நாட்டின் தற்போதைய அதிபர் மற்றும் பிரதமர் ஆகிய இரு தலைவர்களிடமிருந்தும் வெளிப்படுத்தப்படும் முரணான கருத்துக்கள் அவர்களது ஒற்றுமையின் மையைச் சுட்டி நிற்கின்றன.

முன்னாள் ஆட்சியாளரான ராஜபக்ஷவினதும் அவரது குடும்ப உறுப்பினர்களினதும் ஊழல் மற்றும் கொலை வழக்குகள் தொடர்பில் சிறிசேன - விக்கிரமசிங்க அரசாங்கமானது இரகசியமான பின்கதவுச் சமரசப் பேச்சுக்களில் ஈடுபடுவதும் தற்போது அதிகரித்துள்ளது.

விரோதத்தைத் தூண்டும் பேச்சுக்களில் ஈடுபடும் பௌத்த பிக்குகள் தொடர்பில் தேசிய அரசாங்கமானது அமைதி காப்பதானது இந்த அரசாங்கம் மீதான மக்களின் நம்பிக்கைக்கு ஏமாற்றமளித்துள்ளது. கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பில் பணியாற்றும் தமிழ் அரச அதிகாரி ஒருவரை பௌத்த பிக்கு ஒருவர் தகாத வார்த்தைகளால் திட்டியதுடன் கொலை அச்சுறுத்தலையும் விடுத்த போதும் இவருக்கு எதிராக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

அரசியற் செல்வாக்கைக் கொண்ட இந்த பௌத்த பிக்கு தொடர்ந்தும் ராஜபக்ஷ காலத்திலிருந்து இவ்வாறான மீறல்களில் ஈடுபட்ட போதிலும் இவருக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அனைத்துலக பங்குதாரர்களுக்கு குறிப்பாக அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற சிறிலங்காவுடன் மிக நெருக்கமான உறவைப் பேணும் நாடுகளைப் பொறுத்தளவில் இந்த ஆட்சி மாற்றமானது முற்றிலும் பொருளாதார அல்லது பாதுகாப்பு சார் கூட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.

சிறிலங்காவின் முன்னைய ஆட்சியில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்திருந்ததால் அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் சிறிலங்காவிற்கும் இடையிலான உறவுநிலையானது பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக இவ்விரு நாடுகளினதும் உள்நாட்டு மற்றும் அரசியல் முன்னேற்றங்கள் மீதான நலன்கள் பாதிப்படைந்திருந்தன.

சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கமானது அரசியல் ஸ்திரமற்றதாகவும் பாதுகாப்பற்ற நிலையிலும் காணப்படுகின்ற போதிலும், இந்த அரசாங்கமானது தன்னால் வழங்கப்பட்ட அரசியல் சீர்திருத்தம் தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்றக் கூடிய கணிசமானளவு வாய்ப்பைக் கொண்டுள்ளது.

அரசியற் தீர்வுக்கான காலநிலை ஒருபோதும் உகந்ததாகக் காணப்படவில்லை. சிறிலங்காவில் இரண்டு பிரதான கட்சிகள் முரண்பாடான நிலையைக் கடைப்பிடித்தமை மட்டுமல்லாது, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சியானது சிறிலங்காவின் முன்னைய அரசாங்கங்களில் அங்கம் பெறாது அவற்றைப் புறக்கணித்து வந்துள்ளமையுமே சிறிலங்காவில் அரசியற் தீர்வுக்கான வாய்ப்பான காலநிலை ஒன்று உருவாகாதமைக்கான காரணமாகும்.

ஆனால், தற்போது எதிர்க்கட்சியாகத் திகழும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தது. அத்துடன் தற்போதைய தேசிய அரசாங்கத்தின் பெரும்பாலான நிகழ்ச்சிகளுக்கும் இது ஆதரவளித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டிய தேவையை உணர்ந்து செயற்படுகிறது.

அனைத்துலக சமூகத்தாலும் மனித உரிமைகள் அமைப்புக்களாலும் சிறிலங்கா மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டும் என தீவிரமாக அழுத்தம் வழங்கப்பட்ட போதிலும் சிறிலங்காவில் தேசிய அரசாங்கம் பொறுப்பேற்ற கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த அழுத்தம் கணிசமானளவில் குறைவடைந்துள்ளது.

பொறுப்புக்கூறல் தொடர்பான அரசியற் சீர்திருத்தத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவளித்துள்ளது. இது தொடர்பில் கேள்வியெழுப்புவதால் பாரியதொரு அரசியல் ஆபத்து ஏற்படும் என்பதை கூட்டமைப்பு அடையாளங் கண்டுகொண்டமையே இதற்கான காரணமாகும்.

இதுவே சிறிலங்காவானது ஒருபோதும் அரசியற் தீர்வொன்றை எட்டமுடியாமற் போனமைக்கு வழிவகுத்தது.

எதுஎவ்வாறெனினும், தேசிய அரசாங்கமானது ஆட்சிக்கு வரும்போது ஆட்சியில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டன. இவ்வாறான குறைபாடுகளுடன் ஆட்சியை நடத்துவதென்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல.

சிறிலங்காவின் 225 நாடாளுமன்ற ஆசனங்களில் சிறிசேன - விக்கிரமசிங்க அரசாங்கமானது 155 ஆசனங்களைக் கொண்டுள்ளது. சிறி சேனவிற்கு 50 சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக உள்ளனர். இவர்களில் சிலர் ராஜபக்ஷ தரப்பிற்கு மாறவுள்ளனர் என அச்சுறுத்தி வருகின்றனர். ஏனைய சிறி லங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜபக்ஷவிற்கு ஆதரவாக உள்ளனர். ஆகவே அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சிறி சேன தனது சக்தி முழுவதையும் ஒன்றுதிரட்டி தனது கட்சியை ஒன்றாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

குறிப்பாக ராஜபக்ஷவிற்கு ஆதரவான தரப்பினர் புதிய அரசியற் கட்சியை நோக்கி நகரும் நிலையில் சிறிசேன தனது கட்சி உறுப்பினர்களை தனது தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றிணைக்க வேண்டிய நிலையிலுள்ளார்.

2017இல் ஆட்சியைக் கவிழ்க்கவுள்ளார் என ராஜபக்ஷ மிக அண்மையில் அச்சுறுத்தல் விடுத்திருந்தார். ஆனால் இவரது கருத்துக்களை நாட்டின் அதிபர் மற்றும் பிரதமர் ஆகியோர் முற்றிலும் நிராகரித்துள்ளனர். கால முதிர்விற்கு முன்னர் நாடாளுமன்றைக் கலைப்பதற்கு அரசரமைப்பு இடமளிக்க வில்லை எனவும் அத்துடன் ராஜபக்ஷ தலைமையில் மீண்டும் ஆட்சியமைப்பதற்கான சாதகமான அரசியற் சூழ்நிலையும் தற்போது காணப்படவில்லை எனவும் நாட்டின் அதிபர் மற்றும் பிரதமர் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால், இந்த அரசாங்கம் தோல்வியடைகின்ற போதெல்லாம், ராஜபக்ஷ தன்னை அரசியலில் நிலைப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொருளாதார அபிவிருத்தி மற்றும் வர்த்தக உடன்படிக்கைகளில் முழுமையான கவனத்தைச் செலுத்தும் இதே வேளையில், தற்போதைய அரசாங்கத்தின் பிரதான ஆளுங் கட்சியாகத் திகழும் ஐக்கிய தேசியக் கட்சியானது தனது பின்னிருக்கை உறுப் பினர்களின் அழுத்தத்திற்கு முகங் கொடுக்கின்றது.

ஸ்திரமானதொரு அரசாங்கம்

(19 ஆம் பக்கம் பார்க்க..)



# “ஓ! அமெரிக்கா …!! எங்கே போகிறாய்…?” 60

பொன்.வேணு கிருஷ்ணா

**பெருவணிக பத்திரிகைத்துறையினது மனோபாவம்**

குற்றஞ்சாட்டப்படும் ரஷ்ய ஊடுருவல் குறித்த இந்த பரந்த ஊடக பரபரப்பில், அங்கே வெளியான தகவல்களின் உள்ளடக்கம் குறித்து ஏறத்தாழ எந்தக் குறிப்புகளும் இல்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். நியூயோர்க் டைம்ஸ் மற்றும் வொஷிங்டன் போஸ்ட் போன்ற பெருவணிக பத்திரிகைத்துறையினது மனோபாவமானது, டொனால்ட் ட்ரம்பின் வரி சர்ச்சைகள் விவரங்கள் டைம்ஸ் செய்தியாளருக்குக் கிடைத்திருந்தது என்று கூறப்படுவதைப் போல, பெயர் வெளியிடாத ஓர் ஆதார நபரிடமிருந்து அவற்றின் நிருபர்களில் ஒருவருக்கு DNC இன் மின்னஞ்சல்கள் கிடைத்திருந்தால், அந்தப் பதிப்பாசிரியர்கள் அத்தகவலை பதுக்கி இருப்பார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

**குடியரசுக் கட்சியின், அடிப்படை வர்க்கக் கண்ணோட்டம்**

அடுத்து செனட்டர் சாண்டர்ஸ், மற்றும் தாராளவாத கூட்டாளி செனட்டர் எலிசபெத் வாரென் என்ன செய்தார்கள்? குற்றஞ்சாட்டப்படும் ரஷ்ய ஊடுருவல் மீதான பிரசாரம் ஊடகங்களில் கட்டவிழ்ந்ததும், இந்த அரசியல் கோழைகள் உளவுத்துறை அமைப்புகளின் முன்னால் சரணாகதி அடைந்தார்கள். இந்த உண்மை, அவர்கள் ஓர் எதிர்ப்பை பிரதிநிதித்துவம் செய்கிறார்கள் என்ற அவர்களது பாசாங்குத்தனத்தின் அபத்தத்தை



The Opinion Pages

**Russia’s D.N.C. Hack Was Only the Start**

**By ROBBY MOOKJAN. 10, 2017**

Continue reading the main story **Share This Page**

Imagine the headlines if, in 2015, Russian agents had leapt out of a van at 2 a.m. in Southeast Washington and broken into the Democratic National Committee offices using sophisticated tools and techniques to steal tens of thousands of documents, including the names and Social Security numbers of donors and employees, and confidential memorandums about campaign strategy for the presidential election.

The world would have been aghast. It would have been, people would say, worse than Watergate............................

உண்மையில் மிகவும் சாத்தியமான ரீதியில் இதுதான் துல்லியமாக நடந்திருக்கும். சாண்டர்ஸூக்கு எதிரான DNC பிரசாரம் குறித்து டைம்ஸ் அல்லது போஸ்ட்க்கு எப்போது முதலில் தெரிய வந்தது அல்லது வோல்ஸ்ட்ரீட்க்கான கிளிண்டன் உரைகளது எழுத்துப் பிரதிகள் எப்போது அவற்றிற்கு கிடைத்ததென யாரும் கேட்கவில்லை. விக்கிலீக்ஸ்க்குத் தான் அது முதலில் கிடைத்தது என்பதில் ஐயம் உள்ளது. ஆனால் விக்கிலீக்ஸ், சி.ஐ.ஏ. மற்றும் பெண்டகனின் சுருக்கெழுத்தாளர்கள் போன்றில்லாமல், அது நிஜமான இதழாளர்களைப் போல செயற்பட்டு, இரகசிய ஆவணங்களை பகிரங்கப்படுத்தி, இராணுவ-உளவுத்துறை தலைமையின் அதிக விருப்பமான வேட்பாளரை (ஹிலாரி) சேதப்படுத்தியது. அதற்காகவும் மற்றும் ஏனைய அம்பலப்படுத்தல்களுக்காகவும், ஜூலியன் அசான்ஜ் அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் அதன் சேவகர்களிடம் தீராத வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டார் - ஆனால் சர்வதேச உண்மைவிரும்பிகள் நன்றி கூற வேண்டும்.

**இராணுவ- உளவுத்துறை எந்திரத்தைச் சார்ந்தியங்கும் ஒட்டுமொத்த அரசியல் ஸ்தாபகத்தின், ஜனநாயகக் கட்சி மற்றும்**

மீண்டும் எடுத்துக்காட்டியது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழிலாள வர்க்கத்திடமிருந்து தப்பிப்பதற்குரிய தனது கடைசி வழியாக இராணுவ-உளவுத்துறை எந்திரத்தைச் சார்ந்தியங்கும் ஒட்டுமொத்த அரசியல் ஸ்தாபகத்தின், ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சியின், அடிப்படை வர்க்க கண்ணோட்டத்தை இவர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்.

**அசான்ஜைக் குற்றஞ்சாட்டுமாறு, குடியரசு கட்சியினரும் ஜனநாயகக் கட்சியினரும், விசாரணையில் உளவுத்துறைத் தலைவர்களை வலியுறுத்த விரும்பினர்**







Figure 1 ஈராக்கில் அமெரிக்க சிப்பாய்களின் கொடுமை


ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போர்க் குற்றங்களையும் மற்றும் உலகெங்கிலுமான அரசுகளுக்கு எதிரான சூழ்ச்சிகளையும்-இந்த நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இவை DNC இன் மின்னஞ்சல் ஊடுருவல் ஒன்றுமேயில்லை என்கிற நிலையில்-இவற்றை ஆவணப்படுத்தி இருந்த அமெரிக்க இராணுவ மற்றும் இராஜாங்கத் தகவல் தொடர்புகளை விக்கிலீக்ஸில் பிரசுரித்ததற்காக அசான் ஜைக் குற்றஞ்சாட்டுமாறு, குடியரசுக் கட்சியினரும் ஜனநாயக கட்சியினரும், வியாழனன்று விசாரணையில் உளவுத்துறைத் தலைவர்களை வலியுறுத்த விரும்பினர்.

நியூயோர்க் டைம்ஸ் எழுதியது, ‘‘இக்கூட்டம் அதன் உள்ளடக்கத்தைப் போலவே அதன் சூழலிலும் அசாதாரணமானது-உளவுத்துறை சமூகத்தை ஆதரிப்பதில் ஒரு பொதுவான, கட்சி பேதமற்ற காட்சிப்படுத்தல் நிலவுகின்ற இந்நேரத்தில், அது ஒரேயொருவரை நோக்கி (ட்ரம்ப்) திரும்பி இருப்பதாகத் தெரிகிறது.’’


**இரண்டு கட்சிகளின் செனட்டர்களும் ‘‘பாரிய பேரழிவுகரமான ஆயுதங்கள்’’ குறித்த பொய்கள் அடிப்படையிலான ஈராக் போரை ஆதரித்தவர்கள், அமெரிக்க உளவுத்துறை முகாமைகளுக்கு மிகவும் அப்பட்டமான விசுவாசத்தைக் காட்டும் போட்டியில் இருந்தனர்**




இவர்கள் அனைவரும், உளவுத்துறை முகாமைகள் மற்றும் பென்டகன் வழங்கிய குறிப்புரைகளில் இருந்து பேசிக் கொண்டிருந்தனர். இந்தியானா ஜனநாயகக் கட்சியாளரான செனட்டர் ஜோசப் டொன்னெலி மிகவும் துதிபாடியவாறு, அசான்ஜ் மற்றும் விக்கிலீக்ஸ் குறித்து உண்மை கூறும் போட்டியில், நாங்கள் ஒவ்வொரு சமயத்திலும் உங்கள் தரப்பில் உள்ளோம் என்று உளவுத்துறை தலைவர்களுக்குத் தெரிவித்தார்.




இந்தஉட்பொருள் வொஷிங்டன் போஸ்டின் வியாழன் பதிப்புதலையங்கத்தில் வெளிப்படையாக விளக்கப்பட்டிருந்தது, அது ஜனநாயகக் கட்சியினர் மீதான ரஷ்ய ஊடுருவல் வாதங்களை உதறிவிடும் ட்ரம்பைக் கண்டித்ததுடன், அதை ‘‘யதார்த்தத்தை மறுக்கும்’’ ஒரு முயற்சியாக வர்ணித்தது. அவர் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு உதவ, ட்ரம்ப் விரைவிலேயே ‘‘உளவுத்துறை சார்பானவர்களைத் தான்’’ சார்ந்திருக்க வேண்டியிருக்கும் என்று அறிவித்த அந்த தலையங்கம், ட்ரம்ப் அமெரிக்க உளவுத்துறை முகாமைகளை விட அசான்ஜ்க்கு ஏன் அதிக முக்கியத்துவம்





இரண்டு கட்சிகளின் செனட்டர்களும்-இவர்களில் பெரும்பாலானவர்கள் ‘‘பாரிய பேரழிவுகரமான ஆயுதங்கள்’’ குறித்த பொய்கள் அடிப்படையிலான ஈராக் போரை ஆதரித்தவர்கள்-இவர்கள் உளவுத்துறை முகாமைகளுக்கு மிகவும் அப்பட்டமான விசுவாசத்தைக் காட்டும் போட்டியில் இருந்ததாகத் தெரிந்தது.

கொடுக்கிறார்? என்று கேள்வி எழுப்பியது.

**ஊடகங்களின் சரமாரியான தாக்குதலை முகங்கொடுத்ததில், ட்ரம்ப் பின்வாங்கினார்**

ஊடகங்களின் சரமாரியான தாக்குதலை முகங்கொடுத்ததில், ட்ரம்ப் பின்வாங்குவதாகத் தெரிகிறது. அசான்ஜ்க்கு அவர் ஒப்புதல் வழங்கவில்லை என்றும், உளவுத்துறை முகாமைகளையே அவர் விரும்புவதாகவும் அவர் டுவீட் செய்தார். ஆனால் போஸ்ட் இன் கேள்வியை அப்பத்திரிகையை நோக்கியே திருப்பி ஆக வேண்டும். ஏன் அசான்ஜை ஒருவர் நம்புகிறார்? ஏனென்றால் விக்கிலீக்ஸ்தான் உண்மையான இதழியல் விசாரணையை நடத்தி, அமெரிக்க அரசு குற்றங்களுக்கான ஆதாரங்களை வெளிக் கொணர்ந்து, அதைப் பகிரங்கப்படுத்தி உள்ளது.


**எட்வர்ட் ஸ்னொவ்டன், NSA ஒவ்வொரு அமெரிக்கர்களையும் மட்டுமின்றி, பூமியின் ஒவ்வொரு மனிதர்களது தொலைதொடர்பு மற்றும் இணைய நடவடிக்கைகளைச் சேகரிக்க நூற்றுக்கணக்கான மென்பொருள் கருவிகளைக் கொண்டிருப்பதை அம்பலப்படுத்தினார்**



(Edward Snowden, is seen live from Moscow, at the Norwegian PEN event ‘Waiting for Snowden’ in Oslo on 18 November 2016. Photograph: Berit Roald/ AFP/Getty Images)

அதற்கு முரணாக, உளவுத்துறை முகாமைகள் பொய்யர்களாக நிரூபணமாகி உள்ளன. எந்தவொரு செனட்டரும், தேசிய உளவுத்துறை இயக்குனராக ஓய்வுபெற்ற தளபதி ஜேம்ஸ் கிளாப்பர் தலைமையில் இருந்த மேற்பார்வைக் குழுவின் வாய்மையைச் சவால் செய்யவில்லை. சட்டப்படி பார்த்தால், மார்ச் 2013 இல் காங்கிரஸ் முன் அவர் சாட்சியம் அளித்த பின்னர் அவரது பொய்சான்றுகளுக்காக கிளாப்பர் சிறையில் அடைக்கப்பட்டிருக்க வேண்டும், மில்லியன் கணக்கான அல்லது நூற்றுக் கணக்கான எல்லா அமெரிக்கர்களது எந்தவிதமான தரவு வகைகளையும் NSA சேகரிக்கிறதா? என்று கிட்டத்தட்ட வெளிப்படையாகக் கேட்கப்பட்ட போது, கிளாப்பர் ‘‘இல்லை ஐயா’’ என்று பட்டவர்த்தனமாக மறுத்து விடையிறுத்திருந்தார். மூன்று மாதங்களுக்குப் பின்னர், எட்வர்ட் ஸ்னொவ்டன், NSP ஒவ்வொரு அமெரிக்கர்களையும் மட்டுமின்றி, பூமியின் ஒவ்வொரு மனிதர்களது தொலைத் தொடர்பு மற்றும் இணைய நடவடிக்கைகளைச் சேகரிக்க நூற்றுக் கணக்கான மென்பொருள் கருவிகளைக் கொண்டிருப்பதை அம்பலப்படுத்தினார்.

(கேள்வி தொடரும்...)



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர் களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின் றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.





# தமிழ்த் தேசிய எழுச்சி

25

## விடுதலைப் புலிகளுக்கு இந்திய இராணுவப் பயிற்சி

சென்னை மாநகரில், பிரபல்யமான Blue Diamond விடுதியில், ஒரு மாடிக் கட்டடத்தை வாடகைக்கு அமர்த்தி, அதனைத் தனது தலைமைச் செயலகமாகக் கொண்டு, 'றோ' அதிகாரிகளுடன் இணைந்து சந்திரகாசன் செயற்பட்டு வருகிறார் என்ற தகவலையும் அலெக்ஸ்சாந்தர் எனக்குத் தெரிவித்தார். அந்த விடுதியில், சந்திரகாசனின் மாடியில் தனது புல னாய்வு உளவாளி ஒருவர் உணவு பரிமாறு பவராகப் பணிபுரிகிறார் என்றும் ஒட்டுக் கேட்கும் கருவிகள் பொருத்தி அங்கு நடைபெறும் திரு விளையாடல்களை எல்லாம் தான் நன்கு அறிந்து வைத்திருக்கிறார் எனவும் தெரிவித்தார். சந்திரகாசனுடன் இணைந்து செயற்படும் 'றோ' அதிகாரிகளில் சிலர் ஊழல் பேர்வழிகள் என்றும் அவர்களுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்ப்பதே நன்று என்றும் அலெக்ஸ்சாந்தர் அறிவுரை சொன்னார். அலெக்ஸ்சாந்தர் சொன்னதில் உண்மை இருக்கத்தான் செய்தது. ஏனென்றால் சந்திர காசன் அப்பொழுது நெருங்கிய தொடர்பு வைத் திருந்த உன்னிக்கிருஷ் ணன் எனப் படும் 'றோ' அதிகாரி பின்னர் கைது செய்ப் பட்டு, இந்திய இராணுவப் பயிற்சி சம்பந்தப் பட்ட இரகசிய தகவல்களை அமெரிக்க புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏக்கு கையளித்தார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டு நீண்ட காலக் கடூழியச் சிறையில் தள்ளப் பட்டார்.

விடுதலைப் புலிகள் இயக்கமும் இந்திய இராணுவப் பயிற்சியையும் ஆயுத தளபாடங் களையும் பெற்றுக் கொள்வதன் அவசி யத்தை அலெக்ஸ்சாந்தருக்கு எடுத்து விளக்கிய நான், அதற்கான வழிமுறை பற்றியும் கேட்டேன். தமிழீழ மக்களின் நல்லாதரவு பெற்ற விடுதலை அமைப்பாக நீண்ட கால ஆயுதப் போராட்ட அனுப வத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கமே களத்தில் நின்று இயங்கி வருகின்றது என்ற உண்மையை இந்திராகாந்தி அம்மை யாருக்கு விவரமாக எழுதி, இந்தியாவின் இராணுவப் பயிற்சித் திட்டத்தில் புலிகளுக் கும் இடமளிக்குமாறு வேண்டுகோள் விடுக் கும்படியும் அலெக்ஸ்சாந்தர் ஆலோசனை வழங்கினார்.


இந்திரகாகாந்திக்கு எழுதிய கடிதத்தின் பிரதி ஒன்றை 'றோ' புலனாய்வு அமைப்பின் அதிபர் சக்சேனாவுக்கும் அனுப்பி வைக்கு மாறும் அவர் சொன்னார்.

அவர் கூறியபடியே இந்திராகாந்திக்கு நான் ஒரு விவரமான கடிதம் எழுதினேன். அதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கை, கருத்தியல், போராட்ட வரலாறு என்ற ரீதியில் விளக்கத்தைக் கொடுத்து, இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தில் எமது இயக்கத்தை இணைத்துக் கொள்ளும் அவ சியத்தையும் வலியுறுத்தினேன். அத்தோடு அக் கடிதத்தின் பிரதி ஒன்றை 'றோ' அதிபர் சக்சேனாவுக்கும் அனுப்பி வைத்தேன். புது டில்லியிலிருந்து பதில் வர நீண்டகாலம் பிடிக்கவில்லை.

பாரதப் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்து இரண்டு வாரத்துக்குள் புதுடில்லி யிலுள்ள 'றோ' புலனாய்வுத் துறைத் தலை மைச் செயலகத்திலிருந்து ஓர் உயர் அதிகாரி என்னைச் சந்திப்பதற்காகச் சென்னை வந் தார். எஸ். சந்திரசேகரன் என்ற பெயருடைய அவர் மதுரையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழர். சென்னை நகரப்புறத்திலுள்ள விடுதி ஒன்றில் மிகவும் இரகசியமான முறையில் சந்திப்பு இடம் பெற்றது. விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் சகல தொடர்புகளுக்கும் பொறுப்பதிகாரியாக தான் நியமிக்கப்பட்டு இருக்கிறார் எனச் சொன்னார் அவர். முதற் சந்திப்பின் போதே விடுதலைப்புலிகள் இயக்கம்பற்றிதுருவி ஆராய்ந்துஎன்னைக் குடைந்து எடுத்தார். புலிகள் இயக்கத்தின்



மாத்தையாவும் பிரபாவும்



கட்டமைப்பு, ஒழுக்க விதிகள், தலைமைப் பீடம், அரசியல் கொள்கை, ஆயுதப் போராட்ட வரலாறு போன்ற பல்வேறு விடயங்களைப் பற்றி அவர் விடுத்த கேள்விக் கணைகளின் நுட்பத்திலிருந்து சந்திரசேகரன் ஓர் ஆழ மான ஆளுமையுடைய மனிதர் என்பதை உணர்ந்து கொண்டேன். ஆயுதப் போரியல் வடிவங்கள் பற்றியும் நிறைய அறிந்து வைத்திருந்தார். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றி மிகவும் ஆர்வ மாக விசாரித்தார். பிரபாகரனின் ஆளுமை, அரசியல் நோக்கு, போராட்ட அனுபவமும் என அவர் எழுப்பிய கேள்விகளுக்கு விவர மான பதில் அளித்தேன். விடுதலைப் புலிப் போராளிகளுக்கு இந்திய இராணுவப் பயிற்சி அளிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்வதற் காக பிரபாகரனை தான் நேரில் சந்திக்க வேண்டும் என வலியுறுத்தினார். இந்தியா வில் பிரபாகரனின் பாதுகாப்புப் பிரச்சினை பற்றி நான் கேட்டபோது, அதற்குத் தான் உத்தரவாதம் அளிப்பதாகச் சொன்னார். இந்திராகாந்தியின் விசேட பணிப்பின் பேரில் இப்பயிற்சித் திட்டம் ஒழுங்கு செய்யப் படுவதால் பிரபாகரனின் பாதுகாப்புக் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றார். இறுதியாக, நாயர் என்ற பெயரு டைய அதிகாரி ஒருவரை அறிமுகம் செய்து அவர் மூலம் தன்னுடன் தொடர்புகளை வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொண் டார். சந்திரகாசனுக்கும் ஏனைய தமிழ் அமைப்புகளுக்கும் தெரியாதவாறு எமது போராளிகளுக்குப் பயிற்சி வழங்கப்படு மெனக் கூறிய சந்திரசேகரன், விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஓரம் கட்டியது குறித்துச் சந்திரகாசன் மீது புதுடில்லி அதிருப்தி கொண் டிருப்பதாகவும் தெரிவித்தார்.

> "விடுதலைப் புலிகளுக்கு இராணுவப் பயிற்சி என்ற பொறிவைத்து புலிகளின் தலைவரை மடக்கிப் பிடிப்பதுதான் இந் தியப் புலனாய்வுத் துறையினரின் கபட நோக்கம் என்பது அவர்களது வாதம். இவர்களுடன் வாதிடுவதில் அர்த்த மில்லை என உணர்ந்த நான் இந்திய நிலைமையை விரிவாக விளக்கி , இந்தியப் பயிற்சி பெறுவதாயின் கட்டாயமாக இந்தியாவுக்கு வந்தாக வேண்டுமென்றும், பாதுகாப்புப் பிரச்சினை எதுவும் எழப்போவதில்லை என்றும் உறுதி கூறிப் பிரபாகரனுக்குக் கடிதம் எழுதி அவர்களிடம் கொடுத்தேன். இந்தியாவில் பிரபாகரனுக்கு ஏதாவது பிரச்சினை எழுந்தால் அதற்கான பொறுப்பையும் 'இயக்க நடவடிக்கை யையும்' நான் தான் ஏற்க வேண்டிவரும் என மிரட்டி விட்டுச் சென்றார் மாத்தையா."

சந்திரசேகரனுடன் நிகழ்ந்த சந்திப்பின் விவரங்களை உடனடியாகவே பிரபா கரனுக்குத் தெரியப்படுத்தியதுடன் எமது போராளிகளுக்கு இந்தியாவில் இராணுவப் பயிற்சி அளிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்காக உடனடியாக தமிழ் நாட்டுக்கு வருகை தருமாறும் அவரைக் கேட்டுக் கொண்டேன். இந்தியா வருவதில் எழக்கூடிய பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்து அறிந்து கொள்வதற்காக இரு மூத்த உறுப்பினர் களான மாத்தையாவையும் ரகுவையும் தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைத்தார் பிரபா கரன். மதுரையில் ஒரு விடுதியில் மாத்தை யாவும் ரகுவும் என்னைச் சந்தித்தனர். பிரபா கரன் தமிழ் நாட்டுக்கு வந்தால் அவர் கைது செய்யப்படலாம் என்பது மாத்தையாவின் கருத்து. பாண்டி பஜார் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நிபந்தனைப் பிணையிலிருந்து தமிழீழத்துக்கு தப்பிச் சென்றவர் என்பதால் இந்தியச் சட்டத்தை மீறிய குற்றத்துக்காகப் பிரபாகரனை இந்திய காவல்துறையினர் கைது செய்து சிறையில் தள்ளலாம் என்பது அவரது வாதம். இந்திரா காந்தியின் ஆசியுடன் இந்திய அரசு தான் பிரபாகரனுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது என்று கூறியும் அவர்களை நம்பச் செய்ய முடியவில்லை. விடுதலைப் புலிகளுக்கு இராணுவப் பயிற்சி என்ற பொறி வைத்து புலிகளின் தலைவரை மடக்கிப் பிடிப்பதுதான் இந்தியப் புலனாய்வுத் துறை யினரின் கபட நோக்கம் என்பது அவர்களது வாதம். இவர்களுடன் வாதிடுவதில் அர்த்த மில்லை என உணர்ந்த நான் இந்திய நிலை மையை விரிவாக விளக்கி , இந்தியப் பயிற்சி பெறுவதாயின் கட்டாயமாக இந்தியாவுக்கு வந்தாக வேண்டுமென்றும், பாதுகாப்புப் பிரச்சினை எதுவும் எழப்போவதில்லை என்றும் உறுதி கூறிப் பிரபாகரனுக்குக் கடிதம் எழுதி அவர்களிடம் கொடுத்தேன். இந்தி யாவில் பிரபாகரனுக்கு ஏதாவது பிரச்சினை எழுந்தால் அதற்கான பொறுப்பையும் 'இயக்க நடவடிக்கையையும்' நான் தான் ஏற்க வேண்டிவரும் என மிரட்டி விட்டுச் சென்றார் மாத்தையா. மறுநாள், எனது கடிதம் பிரபாகரன் கையில் கிடைத்ததும் தான் விரைவில் இந்தி யாவுக்கு வரவிருப்பதாகப் பதில் அனுப்பி யிருந்தார். எனது விளக்கத்திலும் உறுதி மொழி யிலும் பிரபாகரன் நம்பிக்கை வைத்திருந் தார். என்பதை அறிந்து எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி . (தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை

## மின்வலு பிரதி அமைச்சர் அஜித்பெரேரா வேண்டுகோள்

கொழும்பு, ஜன.13

கடுமையான வறட்சி நிலவிய போதிலும் மின்சாரம் துண்டிக்கப்படமாட்டாது என்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்தார்.

எனினும், மின்சாரப் பாவனையாளர்கள் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''வறட்சியின் காரணமாக நீர் மூலமான மின்சக்தி உற்பத்தி 35 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

அனல் மின்நிலையம் மூலமான மின்னுற்பத்தியைக் கொண்டு வறட்சியால் ஏற்படக்கூடிய மின்சாரப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கு நாம் தயாராகி வருகின்றோம்.

தேசிய மின் வலைப் பின்னலுக்கு மின்சாரத்தை வழங்க முன்வருவார்களாயின் அவ்வாறானோர்களுக்கு ஒரு மின் அலகுக்கு 36 ரூபா 50 சதம் வழங்கப்படும்.

மின்துண்டிப்பு இடம் பெறுமாயின் அது தொடர்பாக முன்கூட்டியே அறிவிக்கப்படும். ஆனால் தற்போழுது அவ்வாறான ஒரு தேவை இல்லை.''- என்றார். (எ)

# வறட்சியான காலநிலை நீடித்தால் மின்சாரம் தடைப்படும் அபாயம்

## இலங்கை மின்சாரசபை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.13

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை தொடர்ந்து நீடித்தால், மின்சாரம் தடைப்படும் அபாயம் ஏற்படும் என்று இலங்கை மின்சார சபை பொறியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், தற்போது நீர் மின்சார உற்பத்தியில் 12 வீதம் குறைவடைந்துள்ளதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''நீர் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்ற பல நீர்த்தேங்களின் நீர்மட்டம் 50 வீதம் வரையில் குறைவடைந்துள்ளது. இந்தநிலையில், மழை பெய்யவில்லை என்றால் தினமும் ஒரு வீதம் என்ற அளவில் நீர் மட்டம் குறைவடையும்.

நீர் மட்டம் 20 வீதம் வரை குறைவடையும் போது மின்சார உற்பத்தி நிறுத்தப்படும்.

அதற்கமைய எதிர்வரும் மாதங்களுக்கு மழை கிடைக்கவில்லை என்றால் மின்சார உற்பத்தி முழுமையாக நிறுத்தப்படும்.

நாட்டின் முழுமையான மின்சக்தி பயன்பாடு 41 வீதம் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படுகிறது. அரசுக்குச் சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களில் மொத்த உற்பத்தித்திறன் மின்சார நுகர்வு 21 வீதம். எப்படியிருப்பினும் நீர்மின் உற்பத்தி தடைப்படும் அவதானத்திற்கு உள்ளாகியுள்ளமையால் தனியார் பிரிவுகளில் இருந்து மின்சக்தி கொள்வனவு செய்யப்படவுள்ளது. தற்போது வரையில் 160 மெகாவோல்ற் அளவுக்குத் தனியார் பிரிவுகளில் இருந்து மின்சாரம் கொள்வனவு செய்வதற்குத்திட்டமிடப் பட்டுள்ளது.''- என்றுள்ளது. (எ)

# பழைய மாணவர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜன.13

இணுவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலை முதன்மை மண்டபத்தில் நடைபெறும். இதில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலையின் அதிபர் தி.தேவதயாளன் அறிவித்துள்ளார்.

# நாட்டின் எதிர்காலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்த முயலும் கடும்போக்காளர்

## ராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா கூறுகிறார்



கொழும்பு, ஜன.13

கடும்போக்காளர்கள் நாட்டின் எதிர்காலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள் என்று ராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''அரசியல் நோக்கில், அடிப்படையின்றி குழப்பங்களை விளைவிப்பதால் அரசுக்கோ அல்லது தனியொரு கட்சிக்கோ பாதிப்புக்கிடையாது. ஒட்டுமொத்த நாட்டின் எதிர்காலத்தையே அது பாதிக்கும்.

உலகப் பொருளாதார சவால்களை வென்றெடுத்து பெரிய அபிவிருத் திட்டங்களை முன்னெடுப்பதே பேண்தகு இலங்கை என்ற திட்டத்தின் பிரதான நோக்கம்.

10 லட்சம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி பொருளாதார நலன்களை மக்களுக்கு வழங்க வேண்டுமாயின் நிச்சயமாக ஏற்றுமதி வர்த்தகத்தை மேம்படுத்த வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு அரசு கடந்த 2 ஆண்டு களாகப் பெரியளவில் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.''-என்றார். (எ)

# தினசரி ராசி பலன் 13.01.2017

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 09.30 - 10.30 |
| | மாலை : 04.30 - 05.30 |
| ராகு காலம் | : 10.30 - 12.00 |
| குளிகன் | : 07.30 - 09.00 |
| எம கண்டம் | : 03.00 - 04.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

மேல் நோக்கு நாள்

**மேஷம்:** ஜெயம் - நல்முயற்சிகள் சிறக்கும், எடுக்கும் காரியத்தில் கீர்த்தி தரும் சிறப்பான நன்னாள்.

**ரிஷபம்:** கவலை - பண்டப் பரிமாற்றங்களில் வாக்குத் தவறுவதால் கவலைகள் மனதை ஆளும்.

**மிதுனம்:** உழைப்பு - அனைத்துக் காரியத்திலும் முயற்சியுடன் செயற்படும் நன்னாள்.

**கடகம் :** ஊக்கம் - இன்று உங்களுடைய செயலில் நல்முன்னேற்றம் தோன்றும்.

**சிம்மம் :**பேராசை - அளவான ஆசைகளுடன் அனைவரையும் அரவணைத்தால் நலம் நல்கும்.

**கன்னி:** சோதனை - திடீர் சிரமங்கள், கவலைகள், சோதனை ஏற்படும்.

**துலாம்:** ஏமாற்றம் - நம்பிக்கையுடன் செயற்படும் எண்ணங்கள் யாவும் சற்று ஏமாற்றத்தைத் தரும்.

**விருச்சிகம்:** தொல்லை - இன்று உங்களுக்குச் சந்திராஷ்டமம் என்பதால் செய்யும் செயல்கள் யாவிலும் மற்றவர்களால் தொல்லைகள் சூழும் நாள்.
சந்திராஷ்டமம் : கேட்டை

**தனுசு:** உற்சாகம் - இன்று உங்களுக்குச் சந்திராஷ்டமம் என்பதால் அனைத்துக் காரியத்திலும் நம்பிக்கையோடு செயற்பட மகிழ்ச்சி நிறையும் நன்னாள்.
சந்திராஷ்டமம் : மூலம்

**மகரம்:** சிந்தனை - வளமான வாழ்க்கைக்குத் தேவையான ஆற்றல்கள் அறிவு சுடர்விடும்.

**கும்பம்:** பொறுமை - நிதானத்தைக் கடைப்பிடித்து நிம்மதியை நாடுவீர்கள்.

**மீனம்:** செலவு - இன்று திடீர் செலவீனங்கள் ஏற்படும் நாள்.

# பெப்.6-12 வரையான காலம் தேசிய உடற்பயிற்சி வாரம்

கொழும்பு, ஜன.13

ஆரோக்கியம், மகிழ்ச்சி, வினைத்திறன் மற்றும் வெற்றிகரமான இலங்கையர்களை உருவாக்குவதற்காக எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6-12 ஆம் திகதி வரையான ஒரு வார காலப்பகுதி விளையாட்டு மற்றும் உடற் பயிற்சி தேசிய வாரமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான கலந்து ரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. அனைத்து நிறுவனங்களினதும் பங்களிப்பைப் பெற்று செயற்றிட்டத்தை நடை முறைப்படுத்துமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

இந்த விளையாட்டு மற்றும் உடற் பயிற்சி மேம்படுத்தல் நிகழ்வுகள் நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. மக்களது உடல் நலம் மற்றும் உளநலத்தை மேம்படுத்துவதற்காக இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இந்த நிலையில், சுகம், மகிழ்ச்சி மற்றும் வெற்றிக்காக விளையாட்டு எனும் தலைப்பில் நடைபெறும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் வாரத்தில் பின்வருமாறு நிகழ்வுகள் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன:-

எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதி அரச மற்றும் கூட்டுத்தாபன அலுவலர்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி தினம். பெப்ரவரி 7 ஆம் திகதி தனியார் துறையினருக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினம். பெப்ரவரி 8 ஆம் திகதி சிறுவர் மற்றும் தாய்மார்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினம். பெப்ரவரி 9 ஆம் திகதி பெண்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினம்.

பெப்ரவரி 10 ஆம் திகதி முதியோர் மற்றும் விசேட தேவையுடையோர்களுக்கான விளையாட்டு மற்றும் உடற் பயிற்சி மேம்படுத்தல் தினம். பெப்ரவரி 11 ஆம் திகதி இளைஞர்களுக்கான விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினம். பெப்ரவரி 12 ஆம் திகதி சமூக பங்களிப்புக்கான விளையாட்டு மற்றும் உடற் பயிற்சி மேம்படுத்தல் தினம் - என அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, டபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன, மஹிந்த சமரசிங்க, சந்ராணி பண்டார ஆகியோர் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ)

## பொலிஸார் மக்களுக்கு உதவி

கொழும்பு,ஜன.13

தேசிய சமூக பொலிஸ் சேவை அலகுகள் ஊடாகச் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்ட சிரமதானப் பணி, பெரும் பயனைத் தந்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெய சுந்தர இந்தத் தகவலை, வெலிகமவில் நடைபெற்ற நிகழ்வில் தெரிவித்தார்.

நாட்டின் செயற்படும் பொலிஸ் நிலையங்களில், சமூக தேசியப் பொலிஸ் பிரிவு செயற்பட்டு வரும் தகவலையும் அவர் வெளியிட்டுள்ளார்.

தேசிய சமூகப் பொலிஸ் சேவையின் ஊடாக இதுவரை 383.7 மில்லியன் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அதன் ஊடாக, மக்களுக்கும்பொலிஸாருக்கும் இடையே நெருங்கிய தொடர்புகளை உண்டாக்கும் வாய்பும் மிக அதிகரித்து உள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் அறிவித்தார். (அ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.13

சர்வதேச மாக்ஸிய குழு (யாழ்ப்பாணம்) நடத்தும் கலந்துரையாடல் தொடரில் முதலாவது நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு ஏ.ஸி.ஜோர்ஜின் தலைமையில் இல.361, ஸ்ரான்லி வீதியில் உள்ள டி.எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் இடம்பெறும்.

'தமிழ்த் தேசிய அரசியலில் தமிழரசுக் கட்சியின் வகிபாகம்' என்ற தலைப்பில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் ஆரம்ப உரையை பி.முத்துலிங்கம் ஆற்றுவார். (உ)

# கோப்பாய் ம.விக்கு உதவிகள்







யாழ். மாவட்ட பாதுகாப்புக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்காவின் மேற்பார்வையிலும் அவரின் வேண்டுகோளுக்கு இணங்கவும் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

அந்த பாடசாலையில் நீண்ட காலமாக இருந்த குறைபாடான ஒரு சிறுவர் பூங்காவுக்குத் தேவையான ஊஞ்சல், ராட்டிணம் என்பனவும் இலங்கை இராணுவத்தின் முழுச் செலவில் தயாரித்துக் கையளிக்கப்பட்டன.

இந்த விளையாட்டுப் பொருள்களைத் தயாரிப்பதற்காக இலங்கை இராணுவத்தின் பொறியியற் படைப்பிரிவு மற்றும் இலங்கை இராணுவத்தின் மின் மற்றும் இயந்திரவியல் படைப்பிரிவும் இணைந்து செயற்பட்டன.

இந்தக் கையளிப்பு நிகழ்வுக்கு இராணுவ அதிகாரிகள் பலர் பங்கு கொண்டனர்.

(ஐ)

# திண்மக் கழிவுகளை பிரித்து வழங்குங்கள்

## யாழ். மாநகர சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ். நகரப் பகுதியில் உள்ள தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள், பெரிய ஹோட்டல்கள், நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் திண்மக் கழிவுகளை வகைப்படுத்தி மாநகர சபை வாகனங்கள் கழிவகற்ற வரும் பொழுது கொடுக்குமாறு யாழ். மாநகர சபை அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தல் கடந்த வார இறுதியில் மாநகர வண்டியில் ஒலி பெருக்கி பூட்டி அறிவிக்கப்பட்டிருந்தது.

வைத்திய சாலைகள், பொது நிறுவனங்கள், உணவு விடுதிகள், விடுதிகள், பெற்றோல் நிரப்பு நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் பூங்காக்கள், கோவில்கள் எனப் பல்வேறு நிறுவனங்களுக்கும் மூன்று வகையான பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இரசாயனப் பொருள்கள், நச்சுப் பொருள்கள், ஆஸ்பத்திரிக் கழிவுகள் என்பனவற்றை நேரடியாக சங்கிலியன் சிலையில் உள்ள கிட்டுப் பூங்காவில் ஒப்படைக்குமாறு கடந்த வருடம் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

இந்த வகை கழிவுகள் நச்சுக் கழிவுகளைக் கொண்டுள்ளதால் வளிமண்டலம் நச்சுப்படுத்தப்படும். உதாரணமாக மூச்சு நோயாளர்களுக்கு பாவிக்கப்படும் 'இன்கேலர்கள்' குளோறோ பிளோநோகாபளை' வெளிப்படுத்தும் வல்லமை உடையன.

இவற்றையும் இவை போன்றனவற்றையும் எரிப்பதோ, எறிவதோ, நீர் நிலைகளில் போடுவதோ தடுக்கப்பட்டுள்ளது.

இவற்றைப் பொருத்தமான முறையில், பொருத்தமான இடத்தில் கையளிக்க வேண்டுமென கேட்கப்பட்டு உள்ளது. (ஐ-20)

# நுகர்வோர் சட்டத்தை மீறிய வர்த்தகர்களுக்கு ஒரு லட்சத்து 43 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.13

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தை மீறிய வர்த்தகர்கள் 25 பேருக்கு ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி தனசேகரம் வசந்தசேரம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2016 ஆம் ஆண்டு நிலுவையில் இருந்து 8 வழக்குகளும், புதிதாகத் தாக்கல் செய்யப்பட்ட 20 வழக்குகளில் 17 வழக்குகளுமாகச் சேர்த்து 25 வழக்குகளை அபராதம் விதித்து யாழ். மேலதிக நீதிவான் கறுப்பையா ஜீவராணி தீர்ப்பளித்தார்.

காலாவதியான மென்பானம், பெயின்ட், சம்போ, பவுடர், பிஸ்கட், பேபி கிறீம் போன்றவற்றை விற்பனைக்கு வைத்திருந்த 13 பேருக்குத் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அதேபோல், காலாவதியான பால் பணியாரம், கேக் என்பனவற்றை விற்பனை செய்த வர்த்தகர்கள் இருவருக்குத் தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

காலாவதியான கிறீம் சோடா மற்றும் தலைப் பூச்சு மை என்பனவற்றை விற்பனை செய்த இருவருக்குத் தலா 7 ஆயிரம் ரூபாஅபராதம் விதிக்கப்பட்டது.

இவற்றுடன், 2016 ஆம் ஆண்டு நிலுவையில் இருந்து 8 வழக்குகளுக்கு 52 ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதித்து நீதிவான் உத்தரவிட்டார்.

காலாவதியான அழகு சாதனப் பொருள்களை வைத்திருந்த அழகு நிலையம், காலாவதியான பிஸ்கட், சம்போ, மென்பானம் என்பவற்றை விற்பனை செய்த நால்வருக்குத் தலா 8 ஆயிரம் ரூபாவும், பார்மசி ஒன்றுக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், நிகர எடையை விட 54 கிராம் குறைவாகப் பாண் உற்பத்தி செய்த வெதுப்பகம் ஒன்றுக்கு 4 ஆயிரம் ரூபாவும், காலாவதி யான பவுடர், மென்பானம் என்பனவற்றை விற்பனை செய்த இருவருக்குத் தலா 4 ஆயிரம், 5 ஆயிரம் ரூபா வும் அபராதமாக விதிக்கப்பட்டன.

இந்த வழக்குகள் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.- என்றார். (ஐ-9)



வடமாகாண விவசாய அமைச்சால் கடந்த காலங்களில் அழிக்கப்பட்டு வந்த பாதீனியச் செடி கைதடி சந்தியில் இருந்து நுணாவில் வரையான பிரதான வீதியின் இரு மருங்கிலும் பரவலாகப் பரவி வருகின்றது.

நச்சுத் தன்மை கொண்ட பாதீனியம் விவசாயத்துக்கு மட்டும் அல்லாது உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியது.

கடந்த காலங்களில் வட மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் 400 இளைஞர் யுவதிகளை இணைத்து வடமாகாணத்தில் பாதீனியச் செடியை அழித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-21)





# நீரிழிவு விழிப்பூட்டல் செயலமர்வு

யாழ். நீரிழிவு கழகத்தின் ஏற்பாட்டில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அலுவலர்களுக்கான நீரிழிவு விழிப்பூட்டல் செயலமர்வும் மருத்துவ முகாமும் அண்மையில் நடைபெற்றன. இதனை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆரம்பித்து வைத்தார்.

இதில் யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு நிலைய வைத்தியர் பரமேஸ்வரன் கலந்து கொண்டு நீரிழிவு தொடர்பான விரிவான விளங்கங்களை வழங்கினார்.

தொடர்ந்து சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கர்ப்பக் காலத்தில் ஏற்படும் நீரிழிவு தொடர்பாக சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்வின் போது 150 இற்கும் மேற்பட்ட அலுவலர்க ளுக்கு நீரிழிவு, இரத்த அழுத்தம், உடற் திணிவுச் சுட்டி போன்றன சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டன. (ஐ)

# ஜெயலலிதாவின் சொத்தை அரசுடைமையாக்க முடியாது

## உயர் நீதிமன்ற மதுரைக் கிளை அதிரடி உத்தரவு



மதுரை, ஜன.13

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சொத்தை அரசுடைமையாக்க முடியாது என்று உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி ஜெயலலிதா மரணம் அடைந்தார். அவரது உடல் சென்னை மெரினாவில் உள்ள எம்.ஜி.ஆர். சமாதி அருகே அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் அவரது சொத்துக்கள் யாருக்குப் போகும் என்ற விவாதம் நடைபெற்று வருகிறது.


ஜெயலலிதாவுக்குச் சென்னை போயஸ் கார்டன், கொடநாடு எஸ்டேட், சிறுதாவூர், ஹைதராபாத் உள்ளிட்ட இடங்களில் சொத்துக்கள் உள்ளன.

இந்தநிலையில், ஜெயலலிதாவின் சொத்துக்களை அரசுடைமையாக்கக் கோரி கே.கே.ரமேஷ் என்பவர், உயர் நீதிமன்ற மதுரைகிளையில் பொதுநல வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதன் போது, தனிநபர் சொத்துத் தொடர்பாக பொதுநல மனுவைத் தாக்கல் செய்ய முடியாது என்று கூறி மனுவைத் தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ)

# கென்யாவுக்கு ரூ.683 கோடி கடன் வழங்குகிறது இந்தியா

## இதற்கான ஒப்பந்தம் இரு நாடுகளிடையே கைச்சாத்து



டில்லி, ஜன.13

கென்யாவின் விவசாயத்துறை வளர்ச்சிக்காக சுமார் ரூ.683 கோடியை (10 கோடி டொலர்) இந்தியா கடனுதவியாக அளிக்க உள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்தாகியது.

இந்தியாவுக்குப் பயணம் செய்துள்ள கென்ய ஜனாதிபதி உஹுரு கென்யாட்டா, பிரதமர் நரேந்திர மோடியை டில்லியில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். இந்தப் பேச்சுக்குப்பின், இருவரும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

இதன்போது மோடி பேசியவை வருமாறு:

''இந்தியா - கென்யா இடையே, இரு தரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. குறிப்பாக இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதம் இடம்பெற்றது. இரு நாடுகளிலும் தொழில் - வர்த்தக வாய்ப்புக்களை உருவாக்குவது குறித்து விவாதிக்கப்பட்டது.

கென்யாவின் விவசாயத்துறை வளர்ச்சிக்காக, சுமார் ரூ.683 கோடியை கடனுதவியாக இந்தியா வழங்கவுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் தற்போது கைச்சாத்தானது.

கென்யாவின் விவசாயத் துறையில் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை, இரு நாடுகளுக்கு இடையேயான தொடர்பில் புதிய வடிவத்தைக் கொடுக்கும். கென்யாவில் உற்பத்தியாகும் பருப்பு வகைகளை இந்தியாவுக்கு இறக்குமதி செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும் இருதரப்பிலும் சுகாதாரத்துறை, எரிசக்தித் துறை மற்றும் கல்வித் துறையை மேம்படுத்துகின்றமை தொடர்பில் விவாதிக்கப்பட்டது.'' - இவ்வாறு அவர் தெரிவித்தார். இதே வேளை இந்தியாவின் உதவிக்கு கென்ய ஜனாதிபதி உஹுரு கென்யாட்டா நன்றி தெரிவித்தார். (எ)

# ரூபாத் தாள்கள் மீளப்பெற்றமையால் நாடு பேரழிவைச் சந்திக்கும் அபாயம்

## முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் எச்சரிக்கை

டில்லி, ஜன.13

செல்லாத ரூபா தாள்கள் திட்டத்தால், நாடு மிக மோசமான பேரழிவைச் சந்திக்க உள்ளதாக முன்னாள் பிரதமர், மன்மோகன்சிங் எச்சரித்துள்ளார்.

மத்திய அரசின் செல்லாத ரூபாத் தாள்கள் திட்டத்தைக் கண்டிக்கும் வகையில் டில்லியில் நேற்று முன்தினம் காங்கிரஸ் மாநாடு நடத்தியது. இதில் பங்கேற்று முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் பேசியபோதே இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''செல்லாத தாள்கள் திட்டத்தால், பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் ஏற்படும் என்று நரேந்திர மோடி கூறுவதில் உண்மை எதுவும் இல்லை. இந்த விடயத்தில் பிரதமர் மோடி செய்துள்ள தவறுகளை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை காங்கிரஸ் கட்சியினருக்கு உண்டு.

செல்லாத தாள்கள் திட்டத்தால், மொத்த உள்நாட்டு உற்பத்தி சரிவைச் சந்திக்கும். இதனால், மிக மோசமான பேரழிவு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. நாட்டின் வருமானம் கடந்த இரண்டாண்டுகளில் அதிகரித்து வருவதாக பிரதமர் மோடி கூறுவது பொய். ரூபாத் தாள்கள் வாபஸ் திட்டம் நாட்டைக் கடுமையாகப் பாதித்துள்ளது.



ஜி.டி.பி. குறையும் போது, வேலை வாய்ப்பு, உற்பத்தி, விவசாய வருமானம் குறையும். இது ரூபாத் தாள்கள் மீளப் பெற்றமையால் ஏற்பட்ட பேரழிவு.''-என்றார். (எ)

# லஞ்சக் குற்றச்சாட்டில் விடுதலையானார் பிரதமர் மோடி


டில்லி, ஜன.13

பிரதமர் மோடி குஜராத் முதல்வராக இருந்த காலத்தில் சகாரா குழுமத்திடம் இருந்து லஞ்சம் பெற்றார் என ராகுல் காந்தியால் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. தற்போது அந்தக் குற்றச்சாட்டின் மீது நடவடிக்கை எடுக்க போதிய ஆதாரம் இல்லை என்று கூறி மோடி வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பில், 'ராகுல் காந்தியால் தொடரப்பட்ட இந்த வழக்கில் பிரதமர் மோடி சகாரா குழுமத்திடம் இருந்து பணம் வாங்கினார் என்பதை நிரூபிக்கும் அளவுக்கு எந்த ஆதாரமும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, மோடியை விசாரிக்க இயலாது'- என்றுள்ளது. (எ)

# ஜல்லிக்கட்டு வழக்கில் கை விரித்தது நீதிமன்று

## உடனடியாகத் தீர்ப்பு வழங்க முடியாதாம்



சென்னை, ஜன.13

ஜல்லிக்கட்டு வழக்கில் உடனடியாகத் தீர்ப்பு வழங்க இயலாது என்று உச்ச நீதிமன்றம் கை விரித்து விட்டது.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டியை இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது நடத்தும் வகையில் ஜல்லிக்கட்டு நடத்த இடைக்கால அனுமதி கோரித் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தது.

இந்த மனுவை நேற்று முன்தினம் விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், இடைக்கால அனுமதி கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்து உத்தரவிட்டனர்.

மேலும், ஜல்லிக்கட்டு தொடர்பான வழக்கில் உடனடியாகத் தீர்ப்பளிக்க முடியாது என்றும், ஜல்லிக்கட்டு குறித்து தீர்ப்பு எழுதப்பட்டு வருவதாகவும் நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர். (எ)

# ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் சட்டசபை 23 இல் கூடுகிறது



சென்னை, ஜன.13

ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் முதன் முறையாக தமிழகச் சட்ட சபை கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூடும் சட்டசபைக் கூட்டம் ஆளுநர் (பொறுப்பு) வித்தியாசாகர் ராவ் உரையுடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஜெயலலிதாவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

இதேவேளை சட்டசபைக் கூட்டம் 5 நாள்கள் தொடர்ந்து நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# மோடியின் உரைகள் புத்தகமா

டில்லி, ஜன.13

பிரதமர் மோடி மாதம் ஒருமுறை அகில இந்திய வானொலியில் 'மான் கி பாத்' என்ற தலைப்பின் கீழ் உரையாற்றுவது வழக்கம். தற்போது அந்த உரைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளன.

இதுவரை அகில இந்திய வானொலியில் பிரதமர் மோடி ஆற்றிய உரைகள் அனைத்தையும் ஆய்வியல் படிக்கும் மாணவரான ராஜீவ் குப்தா தொகுத்துள்ளார். (எ)

# மிதியடியில் இந்தியத் தேசியக்கொடி அடி பணிந்தது அமேஸான் இணையம்

டில்லி, ஜன.13

இந்திய தேசியக் கொடி பதிக்கப்பட்ட மிதியடிகளை விற்பனை செய்யக் கூடாது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா விடுத்த எச்சரிக்கைக்கு அமேஸான் அடிபணிந்துள்ளது.

அதற்கமைய அமேஸான் இணையத்தளத்தின் விற்பனைப் பட்டியலில் இருந்து, இந்திய தேசியக் கொடி பதிக்கப்பட்ட மிதியடிகள் நீக்கப்பட்டுள்ளன.

வட அமெரிக்க நாடான கனடாவில் இந்தியத் தேசியக் கொடி பதிக்கப்பட்ட மிதியடிகளை அமெரிக்காவைச் சேர்ந்த அமேஸான் நிறுவனம் விற்பனை செய்து வருவதாகச் சுட்டுரையில் இந்தியர்கள் முறைப்பாடு அளித்தனர்.

அதையடுத்து, சுஷ்மா ஸ்வராஜ் வெளியிட்ட சுட்டுரைப் பதிவில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்திய தேசியக் கொடியை அவமதிக்கும் வகையில் விற்பனை செய்யப்பட்டுவரும் அனைத்துப் பொருள்களையும் அமேஸான் திரும்பப் பெற வேண்டும். இனி, அது போன்ற பொருள்களை அந்த நிறுவனம் விற்பனை செய்யக்கூடாது. அத்துடன், நிபந்தனையற்ற மன்னிப்பும் அந்த நிறுவனம் கேட்க வேண்டும். இவற்றை மேற்கொள்ளாவிடில் அந்த நிறுவன அதிகாரிகளுக்கு இந்தியாவர விசா அளிக்கப்படமாட்டாது.

ஏற்கெனவே அந்த நிறுவன அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள விசா அனுமதியும் ரத்துச் செய்யப்படும்.- என்று அந்தப் பதிவில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனையடுத்து, இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு சரி செய்வதாக 'அமேஸான்' நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்திருந்தார். (எ)

## புர்தா ஆடைகளுக்கு மொரோக்கோவில் தடை

வட ஆபிரிக்க நாடான மொரோக்கோ நாடு பாதுகாப்புக் காரணங்களுக்காக உடலையும் முகத்தையும் முழுமையாக மறைக்கும் புர்தா ஆடைகளை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டிலிருந்து வெளியான ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.


எனினும் இது தொடர்பில் அந்த நாட்டு அரசால் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

மேற்படி ஆடைகளைப் பயன்படுத்தி குற்றவாளிகள் ஆளடையாளம் தெரியாது தம்மை மறைத்துக் குற்றச் செயல்களில் ஈடுபட வாய்ப்புள்ளதைக் கருத்தில் கொண்டே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக 'லி360'- என்ற ஊடகம் கூறியுள்ளது.

அந்த நாட்டு மன்னரான 6ஆம் மொஹமட் பெண்கள் முகத்தை மறைக்காது முக்காடு அணிவதற்கு ஆதரவளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ரஷ்யா இணையவழித் தாக்குதல்; முதன்முதல் ஏற்றுக்கொண்டார் ட்ரம்ப்





நியூயோர்க், ஜன.13

அமெரிக்காவில் நடைபெற்ற கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா இணைய வழித் தாக்குதல்களை நடத்தியது என்பதையும் ட்ரம்ப் முதன்முறையாக ஒப்புகொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் வைத்து இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை, தமது இரகசிய ஆவணங்களை ரஷ்யா வைத்திருப்பதாக வெளியான செய்தி தொடர்பில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ரொனால்ட் ட்ரம்ப் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ரொனால்ட் ட்ரம்ப் பாலியல் தொழிலாளர்களுடன் தொடர்பு கொண்டமை உள்ளிட்ட பல தனிப்பட்ட விடயங்கள் தொடர்பான காணொலிகளும், ஆவணங்களும் ரஷ்யாவிடம் உள்ளன என்று அமெரிக்க புலனாய்வு அமைப்புத் தெரிவித்திருந்தது.

இந்த ஆவணங்கள் ரொனால்ட் ட்ரம்பை கட்டுப்படுத்துவதற்காக ரஷ்யா பயன்படுத்துவதாகவும் கூறப்பட்டிருந்தது. எனினும் இதனை ட்ரம்ப் முற்றாக மறுத்துள்ளார்.

ரஷ்யாவிடம் அவ்வாறான எந்த ஆவணங்களும் இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

மேலும் இவ்வாறான போலியான செய்திகளை வெளியிடுவதன் மூலம், ஜேர்மனியின் நாசி யுகத்திலா தற்போது அமெரிக்கா இருக்கிறது என்ற கேள்வி எழுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், அமெரிக்காவில் நடைபெற்ற கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா இணையவழித் தாக்குதல்களை நடத்தியது என்பதையும் ட்ரம்ப் முதன்முறையாக ஒப்பு கொண்டுள்ளார். (எ)

## 2 ஆம் உலகப்போரை உலகுக்கு அறிவித்த செய்தியாளர் காலமானார்



லண்டன், ஜன.13

இரண்டாம் உலகப் போரை முதன்முதலாக உலகுக்கு அறிவித்த பெண் பத்திரிகையாளர் க்ளெயார் ஹொலிங்வேர்த் தனது 105 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

பிரிட்டன் ஊடகங்களில், உலகின் முக்கிய பிரச்சினைகளை கள நிலை வரங்களுடன் தொகுத்துத் தரும் செய்தியாளராக இவர் பணியாற்றினார். போலந்துக்குள் ஹிட்லரின் நாஸிஸப் படைகள் புகுந்ததை முதன்முதலாக உலகுக்கு அறிவித்தவர் இவரே.

2 ஆம் உலகப் போருக்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்தமையை அடுத்துப் போலந்துக்குச் சென்றிருந்த க்ளெயார், அங்கிருந்த இராஜாங்க அதிகாரி ஒருவரது காரை எடுத்துக் கொண்டு ஜேர்மனியின் கட்டுப்பாட்டில் இருந்த போலந்துப் பகுதிக்குச் சென்றார்.

அங்கு அவர் யுத்தத் தாங்கிகள், கவச வாகனங்கள், எறிகணைத் தாங்கிகள் என்பன போலந்துக்குள் ஊடுருவுகின்றமையை அவதானித்தார். இதை உடனடியாக பிரிட்டன் ஊடகங்களுக்குத் தெரிவிக்க நினைத்த கிளெயார், அவர்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்.

இந்தச் செய்தியை அவர்களுக்குக் கூறியது மட்டுமல்லாமல், தொலைபேசி ரிஸீவரை ஜன்னலுக்கு வெளியே தொங்கவிட்டு களநிலவரத்தைத் துல்லியமாக அவர்களுக்கு உணர்த்தினார்.

1970 முதல் பீஜிங்கில் பணியாற்றி வந்த க்ளெயார், கடந்த சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட வருட காலத்தை ஹொங்கொங்கிலேயே கழித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒருவித மர்மக் காய்ச்சல் பிரான்ஸ் மக்கள் அச்சத்தில்

பரிஸ், ஜன.13

பிரான்ஸில் தற்போது ஒருவித மர்மக் காய்ச்சல் மிகவேகமாகப் பரவி வருவதால் அங்கு வாழும் மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்.

'எச் 3 என் 2' என்ற வைரஸால் ஏற்படும் இந்தக் காய்ச்சலுக்கு இதுவரை 52 பேர் உயிரிழந்துள்ளனர்.

600 இற்கும் மேற்பட்ட மக்கள் அங்குள்ள மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

லட்சக்கணக்கான மக்கள் தினமும் தங்களுக்கு அந்த வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதா என்று உடல் பரிசோதனைச் செய்து வருகிறார்கள்.

இதனிடையில் அந்த நாட்டுச் சுகாதாரத் துறை அமைச்சர் இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்பதால் மருத்துவமனைகள் அதிக படுக்கைகளுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதுபற்றி மருத்துவர்கள் கூறுகையில் -

இந்தக் காய்ச்சல் மிகவும் ஆபத்தானது. நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ளவர்கள், குழந்தைகள், முதியவர்களை இந்த வைரஸ் காய்ச்சல் எளிதில் தாக்கிவிடும். இந்தக் காய்ச்சல் ஒருவருக்குத் தீவிரமடைந்தால் அவரின் இதயம் மற்றும் சுவாசக்குழாய்களில் பிரச்சினை ஏற்படும்.- என்று எச்சரித்துள்ளனர்.

## பாக். எல்லையை மூட சீனா முடிவு

பீஜிங், ஜன.13

தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுக்க பாகிஸ்தானுடனான எல்லையை மூடி பாதுகாப்பைப் பலப்படுத்த சீனா முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தானை ஒட்டிய சீனாவில் ஜின் ஜியாங் மாகாணத்தின் ஹுவாட்டான் பகுதியில் தீவிரவாதிகள் கடந்த டிசெம்பர் 28இல் நடத்திய தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

அதையடுத்து அந்தப் பகுதியில் சீன இராணுவம் நடத்திய தேடுதல் வேட்டையில் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 3 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் மற்றும் ஆப்கனிஸ்தான் ஆகிய நாடுகளில் ஆயுதப் பயிற்சி பெற்ற தீவிரவாதிகள் ஜின் ஜியாங் மாகாணம் வழியாக சீனாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்த முயல்கின்றனர் என்று அந்தநாடு குற்றம் சாட்டி வருகிறது. (எ)

## ஐரோப்பாவில் கடும் பனி இதுவரை 60 பேர் உயிரிழப்பு

ஐரோப்பா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் நிலவி வரும் கடுமையான பனிப்பொழிவினால் இதுவரை 60 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களுள், வீடற்றோர் மற்றும் வயோதிபர்களின் எண்ணிக்கையே அதிகமாகக் காணப்படுகிறது.

இந்த நிலையை அடுத்து பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களுக்கு வீடற்றோரைச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் போலந்தில் மட்டும் இருபது பேர் பனிக்கு இரையாகியுள்ளனர். அங்கு நிலவி வரும் கடுமையான கால நிலையால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

மேலும் பனிக்காலத்தில் சுற்றுச்சூழல் மாசடைவதைத் தவிர்க்கும் முகமாக வோர்ஸோ நகரில் இலவசப் போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதனால் வாகனப் பயன்பாடு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# 10 அணுகுண்டுகள் தயாரிக்கும் யுரேனியம் வட கொரியாவிடம்!

## தென்கொரியா தெரிவிப்பு

சியோல், ஜன.13

வடகொரியாவிடம் 10 அணு குண்டுகளைத் தயாரிக்கும் அளவுக்கு புளூட்டோனியம் உள்ளதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

வட கொரியாவுக்கும், தென் கொரியாவுக்கும் இடையே ஏற்பட்ட பகைமை இன்றுவரை தொடர்கிறது. தென் கொரியாவுக்கு நெருங்கிய நட்பு நாடாகவும், வட கொரியாவின் நிரந்தர எதிரி நாடாகவும் அமெரிக்கா செயற்பட்டு வருகிறது. அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள அணு ஆயுதங்கள் தேவை என்று கருதிய வடகொரியா, சர்வதேச தடைகளை மீறி தொடர்ந்து அணு ஆயுத சோதனையை நடத்தி வருகிறது.


இதுவரை 5 முறை அணு ஆயுத சோதனைகளையும், பல்வேறு ஏவுகணை சோதனைகளையும் நடத்தி உள்ள வட கொரியா மீது ஐ.நா. பாதுகாப்புச்சபையும், அமெரிக்காவும் மிகக் கடுமையான பொருளாதாரத்தடைகளை விதித்துள்ளன.

இந்நிலையில் மேலும் 10 அணு குண்டுகளைத் தயாரிக்கும் வகையில் வடகொரியாவிடம் புளூட்டோனியம் இருப்பு உள்ளதாக தென் கொரியா தற்போது அதிர்ச்சித்தகவலை வெளியிட்டுள்ளது.

வடகொரியாவிடம் 2016 ஆம் ஆண்டு இறுதி நிலவரப்படி அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்யக் கூடிய வகையில் 10 கிலோ அளவுக்கு புளூட்டோனியம் இருந்தது. இதை வைத்து 10 அணு ஆயுதங்கள் தயாரிக்க முடியும். 8 ஆண்டுகளுக்கு முன்பு 40 கிலோ அளவுக்கு வைத்திருந்தது. இதேபோல் மிகவும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை வைத்து ஆயுதங்கள் தயாரிக்கும் திறனை வடகொரியா பெற்றிருக்கிறது. ஆனால், ஆயுத தயாரிப்பு யுரேனியம் எவ்வளவு இருப்பு உள்ளது என்பது தெரியவில்லை என்று தென்கொரிய பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது. (எ)





முல்லைத்தீவு பனிக்கன் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவும் பாடசாலை மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்களுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் பாடசாலை முதல்வர் தலைமையில் சிறப்புற இடம்பெற்றன.

புதிய மாணவர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். இந்த நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-81)





வவுனியாவிபுலானந்தாக் கல்லூரியில் நேற்று முன்தினம் கால்கோள் விழா நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ-100)





கிளிநொச்சி கரைச்சிக் கோட்டத்தில் அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கால்கோள் விழாவில் தரம் ஒன்றில் சேர்ந்துள்ள 65 மாணவர்கள், பெற்றோர்கள் சகிதம் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். (ஐ-70)





அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கிளிநொச்சியில் நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் கலாசார உத்தியோகத்தர் கு.றஜீவன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். (ஐ-70)




வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான கால்கோள்விழா நேற்று முன்தினம் மாணவன் யோ.தமிழரசன் தலைமையில் பாடசாலை கலையரங்கத்தில் இடம்பெற்றது. (ஐ-35)







உயர்தரப் பரீட்சையில் 3 ஏ பெற்று சித்தியடைந்த முகம்மது ஜாபிர் நூருல் ஷிபா (யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), ஹமீம் சாதிக் பாத்திமா றிஸ்மியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) மாணவிகளைப் பொன்னாடை, மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்.கதீஜா மகளிர் கல்லூரியில் அதிபர் ஜான்ஸி கபூர் தலைமையின் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர், வடமாகாண சபை உறுப்பினர் ஐய்யூப் அஸ்மின், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-19)

# யாழ். கிரிக்கெட் மேம்பாடு குறித்து நேரில் ஆராய 'ஸ்ரீலங்கன் கிரிக்கெட்' உயர் அதிகாரிகள் வருகை

## சர்வதேச மைதானத்தை இங்கு அமைக்கவும் நடவடிக்கை

Sri Lanka Cricket

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ். மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை விருத்தி செய்வது தொடர்பான மிக முக்கிய கலந்துரையாடலும் உயர் மட்ட ஆலோசனையும் இன்று பகல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

இதற்காக 'ஸ்ரீலங்கன் கிரிக்கெட்' அமைப்பின் உயரதிகாரிகள் குழு ஒன்று இன்று விசேடமாக யாழ். வருகின்றது.

'ஸ்ரீலங்கன் கிரிக்கெட்' அமைப்பின் தலைவரும், உப சபாநாயகருமான திலங்க சுமதிபால, அந்த அமைப்பின் செயலாளர் மொஹான் டி சில்வா, அதன் உப தலைவர் மதிவாணன் ஆகியோரைக் கொண்ட கிரிக்கெட் அதிகாரிகள் குழுவே இன்று விசேடமாக யாழ். வருகை தரவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் க.தர்மகுலசிங்கம் தலைமையிலான குழு இந்தக் கலந்துரையாடலில் பங்கு பற்றும்.

சங்கத்தின் ஆட்சிக் குழுவினர் மற்றும் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகப் பிரதி நிதிகள் எல்லோரும் இக் கூட்டத்தில் பங்கு பற்றுவர்.


திலங்க சுமதிபால

இன்று முற்பகல் 11.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இந்தக் கலந்துரையாடலும் அதனை ஒட்டிய மதிய போசனமும் இடம்பெறும்.

யாழ். மாவட்ட கிரிக்கெட் தொடர்பாக விரிவான விளக்கம் ஒன்றை சங்கத்தின் தலைவர் க.தர்மகுலசிங்கம் வழங்குவார்.

யாழ். மாவட்டத்தின் கிரிக்கெட்தரம், அதை மேம்படுத்துவதற்கான உத்திகள், வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள், தேவைகள், விருத்தி நடவடிக்கைகள், பயிற்சி வசதிகள், இளம் கிரிக்கெட் வீரர்களை ஊக்கு விப்பதற்கான ஏற்பாடுகள் போன்றவை அடங்கிய விரிவான விளக்கவுரை ஒன்றை அவர் அங்கு நிகழ்த்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து வரும் கிரிக்கெட் உயரதிகாரிகள் குழு இங்கு கழக கிரிக்கெட் அணிகளுக்கும் ஏனைய தரப்புகளுக்குமான கிரிக்கெட் உபகரணங்களையும் இன்றைய கலந்துரையாடல்சமயம் வழங்க இருக்கின்றது என்றும் அறிய வந்தது.

யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பதற்கானதிட்டத்துக்குத் தற்போதைய 'ஸ்ரீலங்கன் கிரிக்கெட்' நிர்வாகம் முன்னுரிமை கொடுத்திருக்கின்றது என அறிவிக்கப்பட்டதன் பின்னணியில், இன்றைய கூட்டத்தில் அந்த விடயம் மிக முக்கியமாகப் பரிசீலிக்கப்படும் எனத் தெரிகின்றது.

இந்த சர்வதேசமைதானத்தை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைத் திட்டத்தை யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் அதன் தலைவர் க.தர்மகுலசிங்கத்தின் வழி காட்டலில் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

அதற்கான இடங்கள் பரிசீலிக்கப்பட்டு வரிசைப் படுத்தப்பட்டிருக்கின்றன. அவை தொடர்பான அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை அமைப்பதற்கான பல தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் வகையிலான பல அம்சங்களை உள்ளடக்கி, இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிகின்றது.


த.தர்மகுலசிங்கம்

மண் சோதனை, வருடம் முழுவதும் தண்ணீர் வசதி, பெரும் எண்ணிக்கையில் கூடும் கிரிக்கெட் ரசிகர்கள் விளையாட்டு ஆரம்பமாக முன்னர்வந்து ஒருங்கு சேர்வதற்கும், ஆட்டம் முடிந்ததும் ஒரே சமயத்தில் கலைந்து செல்வ தற்குமான பல வழிப்பாதைகளைக் கொண்ட மத்திய ஸ்தானம் என்பன போன்ற பல தேவைப்பாடுகளை நிறைவு செய்யக் கூடியதாக இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இன்று வருகை தரும் 'ஸ்ரீ லங்கன்கிரிக்கெட்' அமைப்பின் அதிகாரிகள், அந்த இடங்களையும் நேரில் சென்று பார்த்து, பரிசீலித்து முடிவுகளை எடுப்பர் எனத் தெரிகின்றது.

இதற்கிடையில்- 'ஸ்ரீலங்கன் கிரிக்கெட்' அமைப்பு மாவட்ட மட்ட கிரிக்கெட் அமைப்புகளுக்கு மேலதிகமாக மாகாண மட்ட கிரிக்கெட் அமைப்புகளையும் ஸ்தாபித்துச் செயற்படுத்தும் வகையில் தனது பணிகளை விஸ்தரித்து உள்ளது.

JAFFNA DISTRICT CRICKET ASSOCIATION

அதன்படி, யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட கிரிக்கெட் சங்கங்களுக்கு மேலதிகமாக மன்னார், கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்ட கிரிக்கெட் சங்கங்களையும் செயற்திறனில் மேம்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று 'ஸ்ரீ லங்கன் கிரிக்கெட்' அலுவலர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

இந்த ஐந்து மாவட்டங்களையும் ஒருங்கிணைந்து வடக்கு மாகாண கிரிக்கெட் அமைப்பையும் 'ஸ்ரீலங்கன் கிரிக்கெட்' உருவாக்க உள்ளது. அந்த மாகாண அமைப்பை உருவாக்கும் பொறுப்பு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

அதன் முன்னேற்றம் மற்றும் ஏற்பாடுகள் குறித்தும் இன்றைய கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்க நிர்வாகிகளுடன் 'ஸ்ரீ லங்கன் கிரிக்கெட்' நிர்வாகிகள் பேச்சு நடத்துவர் எனத் தெரிகின்றது.

# போட்டது கோல் பொம்மேஸ் அணி போனது வெளியே விண்மீன் வி.க.

பருத்தித்துறை உதைபந்தாட்டதின் லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் திக்கமுனை மைதானத்தில் விலகல் முறையில் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் கடந்த 24.12.2016 அன்று சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.


கழகத்துக்கு 07 வீரர்கள் பங்குபற்றும் இப்போட்டித் தொடர் ''அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்'' ஞாபகார்த்த மாபெரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி என சிறப்பாகப் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

08.01.2017 அன்று மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகிய போட்டியில் வதிரி பொம்மேஸ் வி.க. அணி,பலாலி விண்மீன் வி.க. அணியியை எதிர் கொண்டது.

இரு அணிகளும் பலம் பொருந்திய அணிகள் என்பதனால் இது பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தாக அமைந்த போட்டி என்றுதான் சொல்ல வேண்டும். நடுவர் ஆரம்ப விசிலை ஊதியவுடனே விண்மீன் அணி தனது கட்டுப்பாட்டுக்குள் பந்தைக் கொண்டு வந்தது. இரு அணிகளும் மிக அழகாக, அற்புதமான முறையில் விளையாட்டை நகர்த்திக் கொண்டிருந்தன.

அவ்வப்போது இரு அணிகளின் தண்டப் பரப்புக்குள், கோல் பிரதேசத்துக்குள், மாறி மாறி பந்து புகுந்து விளையாடிக் கொண்டிருந்தது. தடுப்பாட்டக்காரரின் முன்மதியான செயற்பாட்டினால் முன்கள வீரர்களின் கோல்பெறும் வாய்ப்புக்கள் முடக்கப்பட்டன. போராட்டங்கள் தொடர்ந்தன. ஆயினும் போட முடியவில்லை கோல்களை. இருப்பினும் விறுவிறுப்பு குறையாமலிருக்கக் கண்ணை மூடி முழிப்பதற்குள் மாற்றங்கள் ஏதும் நிகழாமல் முதற்பாதி ஆட்டம் 4.21 மணிக்கு முடிவுக்கு வந்தது.

4.26 மணிக்குஆரம்பித்த இரண்டாம் பாதி ஆட்டத்தில் வதிரி பொம்மேஸ் வி.க அணியின் விளையாட்டு நுட்பத்தில் மாற்றங்கள் காணப்பட்டன என்று தான் சொல்ல வேண்டும். தற்காப்புடன்



கூடிய முன்னேறிப்பாயும் தாக்குதல் ஆட்டத்தில் இறங்கியது பொம்மேஸ். தாக்குதலை சமாளிக்கத் தடுப்பாட்டத்தை கையாண்டது விண்மீன். இருப்பினும் முன்னேறிப் பாயும் ஆட்டத்துக்குள் அகப்பட்ட மீன்கள் மீள முடியாது மண்டியிட்டன. இதனைச் சரியாக கணித்த பொம்மேஸ் கோல்களைப் போடத் தொடங்கியது. அந்தஅணியின் முன் கள 12 ஆம் இலக்க வீரர் எஸ்.சாரங்கன் சிறிது நேரத்தில் தனது அணிக்கான முதலாவது



கோலை பெற்றுக்கொடுத்தார்.

இதனால் விண்மீனின் விளையாட்டில் சற்றுத் திருப்பம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மீண்டும் சொற்பநேரத்தில் பொம்மேஸ் அணியின் முன்கள அதே வீரர் தனது அணிக்கான இரண்டாவது கோலையும் பெற்றுக் கொடுத்தார்.

விண்மீன் போராடிக் கொண்டிருக்கும் போதே பொம்மேஸ் அணியின் முன்கள 08 ஆம் இலக்க வீரர் ரீ.சதீஸ் புகுந்து விளையாடித் தனது அணிக்கான மூன்றாவது கோலையும் பெற்றுக்கொடுத்தார்.

விண்மீனின் போராட்டங்கள் வீணாக்கப்பட்டுக் கொண்டிருக்க போட்டி 4.48 மணிக்கு முடிவுக்கு வந்தது.

இறுதியாக 3:0 என்ற கோல் கணக்கில் வதிரி பொம்மேஸ் வி.க. அணி வெற்றி பெற்றுத் தொடரில் தனது இடத்தைத் தக்க வைக்க, எந்தக் கோலையும் பதிவு செய்யாது தோல்வியுற்று பலாலி விண்மீன் வி.க. அணி வெளியேறியது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக வதிரி பொம்மேஸ் வி.க. அணியின் முன்கள வீரர் எஸ். சாரங்கன் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கான பரிசிலை பருத்தித்துறை தேவன் தேனீர் கடை உரிமையாளர் பரணிதரன் அழகினர் வழங்கிக் கௌரவித்தார்.

# ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 'தமிழர் விளையாட்டு விழா - 2017'



வங்கக்கடலில் வீரகாவிய மாகிய மூத்த தளபதி கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் நினைவாக விக்ரோறியா மாநில தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் ஆண்டுதோறும் நடத்தப் படுகின்ற தமிழர் விளையாட்டு விழா இம்முறை 'தமிழர் விளையாட்டு விழா – 2017' எனும் பெயரில் கடந்த 8ஆம் திகதி ஆஸ்திரேலியா மெல்பேர்ணில் நடைபெற்றது.

காலை 9 மணிக்கு மெல் பேர்ண் ஈஸ்ட் பேர்வுட் மைதானத்தில் ஆரம்பமான இந்த விளையாட்டு விழாவில் ஆஸ்திரேலியாவின் தேசியக்கொடியை தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர் விஷ் ணுராஜனும் தமிழீழத் தேசியக் கொடியை இளைய தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர் ரகுவும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து பாரதி தமிழ்ப் பள்ளியின் முதல்வர் வே.பரந்தாமன் கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு ஈகைச்சுடரேற்றி மலர்வணக்கம் செலுத்தினார்.

அதையடுத்து தமிழீழ மண் மீட்புப் போரில் களமாடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களுக்காகவும் போராட்ட காலத்தில் உயிர்நீத்த பொதுமக்கள், நாட்டுப்பற் றாளர்கள் மற்றும் மாமனிதர் களுக்காகவும் அகவணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் விளையாட்டுப் போட்டி களுக்கான விதிமுறைகள் அறி விக்கப்பட்டு மைதான விளையாட்டுக்கள் ஆரம்ப மாகின.

ஒருபுறத்தில் துடுப் பந்தாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்க சமநேரத்தில் மறுபுறத்தில் சிறுவர்களுக்கான ஓட்டப்போட்டிகள், தவளைப் பாய்ச்சல், பலூன் உடைத்தல், கரண்டியில் தேசிக்காய் கொண்டு ஓடுதல் போன்ற போட்டிகள் நடைபெற்றன.

இன்னொரு புறத்தில் கயிறு இழுத்தல், சங்கீதக்கதிரை, சாக்குஓட்டம் மற்றும் தாயகத்துப் பாரம்பரிய விளையாட்டான கிளித்தட்டு ஆகிய போட்டிகள் நடை பெற்றன.

ஜேம்ஸ் அணியினருக்கும் எல்லாளன் அணியினருக்கும் இடையில் நடந்த கிளித்தட்டு இறுதிப் போட்டியில் ஜேம்ஸ் அணியினர் வெற்றியீட்டி கிண்ணத்தைத் தட்டிக்கொண்டனர்.



கயிறு இழுத்தல் இறுதிப்போட்டியில் வடமராட்சி கிழக்கு உதயம் அணியினர் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தனர்.

நொர்தேன் ரைகர்ஸ் அணியினருக்கும் சிவாஸ் றீகல் அணியினருக்கு மிடையில் நடைபெற்ற துடுப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் சிவாஸ் றீகல் அணியினர் வெற்றி பெற் றனர்.

உதைபந்தாட்ட இறுதிப் போட்டி மில்லர் யுனைற்றட் ரெட் ஸ்ரார் அணிக்கும் எல் லாளன் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் மில்லர் யுனைற்றட் ரெட் ஸ்ரார் அணி 2:0 என்ற அடிப்படையில் வெற்றியீட்டி 2017ஆம் ஆண்டுக்கான சம்பியனா கியது.

கரப்பந்தாட்டப் போட்டிகள் செற்றப் கேம், ஓவர் கேம் என இரண்டு பிரிவுகளாக நடைபெற்றன. செற்றப் கேம் இறுதிப் போட்டியில் மிறர் அணியும் மராக் அணியும் மோதின. இதில் மராக் அணி வெற்றி பெற்றது.

விளையாட்டு விழாவின் இறுதிப்போட்டியாக மிக நீண்டநேரம் நடைபெற்ற கரப்பந்தாட்டம் ஓவர் கேம் போட்டியில் ஈழம்போய்ஸ் அணியினரும் டெனிஸ் அணியினரும் மோதினர். இப்போட்டியில் டெனிஸ் அணியினர் வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தைப் பெற் றுக்கொண்டனர்.





விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வாக போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கேடயங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. பின்னர் தேசியக் கொடிகள் இறக்கப்பட்டு இரவு 9.20 மணியளவில் ' தமிழர் விளை யாட்டு விழா – 2017' நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவேறின.

ஒ

# இலங்கை – தென்னாபிரிக்கா மூன்றாவது டெஸ்ட் போட்டி முதல் நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 338 ஓட்டங்கள்



இலங்கை – தென் னாபிரிக்கா அணிகளுக் கிடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் ஜோகனஸ் பேர்க்கில் நேற்று ஆரம்பமாகி யது.

நேற்றைய முதல் நாள் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதற்குத் தீர்மானித்தது.

குக் மற்றும் எல்கர் ஆகியோர் தென்னா பிரிக்காவின் முதல் இன்னிங்ஸுக்காகக் கள மிறங்கினர்.

41 பந்துகளை எதிர் கொண்டு 10 ஓட்டங்களைப் பெற்றிருந்த குக் மத்தியூஸின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார்.

அடுத்து அம்லா எல்கருடன் இணைந்து தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி னார்.

எல்கர் 54 பந்துகளைச் சந்தித்து 27 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் குமாரவின் பந்துவீச்சில் கருணா ரட்ணவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த டுமினி மிக நீண்ட நேரம் களத்தில் அம்லாவுடன் இணைந்து அதிரடியாக ஆடினார்.

221 பந்துகளை எதிர் கொண்டு 19 பவுண்டரிகள் அடங்கலாக 155 ஓட்டங் களைப் பெற்ற டுமினி குமார வீசிய பந்தில் மெண்டிஸிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் 90 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றது.

ஆட்ட நேர முடிவில் அம்லா 221 பந்துகளைச் சந்தித்து 125 ஓட்டங்களுடனும், ஒலிவர் ஓட்டங்கள் எவற்றையும் பெறாமலும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் குமார 79 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், மத்தி யூஸ் 25 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



## அரசியல்....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியற் தீர்விற்கு ஆதரவளிக்காதவிடத்து அதனைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதை அரசியற் தலைவர் ஒருவர்தான் பெற்றுக் கொண்ட அனுபவங்களைக் கொண்டு அறியமுடியும். அரசியற் தீர்வு பெறாதவிடத்து பாரிய மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட பொருளாதாரத் திட்டங்களும் முறிவடைந்து விடும் என்பதை அரசியற் தலைவர் ஒருவர் நன்கறிந்திருப்பார்.

அரசமைப்பு வரைவு தொடர்பாக ஆறு பேரைக் கொண்ட உபகுழுவின் அறிக்கையானது நாடாளுமன்றின் விவாதத்திற்காகக் காத்திருக்கும் போது, அரசாங்கத்தின் முன்னுரிமைகள் வேறு விடயங்களை நோக்கியனவாக உள்ளமை தெளிவாகிறது. 2016 இன் இறுதிப் பகுதியில் அரசமைப்பு சீர்திருத்த நடவடிக்கை பின் தள்ளப்பட்டு, அரசாங்கமானது உடனடி அரசியல் நிர்ப்பந்தங்களை நோக்கிச் செயலாற்றுவதை முன்னுரிமைப்படுத்தியுள்ளது.

புதிய அரசமைப்புத் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் பெரியளவில் விவாதங்கள் இடம்பெறவில்லை. அரசாங்கமானது அரசியற் சீர்திருத்தங்கள் தொடர்பாக தனது பெரும்பான்மை சிங்கள மக்களுடன் கலந்துரையாடாவிட்டால், அரசமைப்பு சீர்திருத்தமானது ஏனைய அரசியல் அழுத்தங்களை எதிர்ப்பதில் சவால்களை எதிர்நோக்கலாம். இவ்வாறானதொரு சூழ்நிலையில் கருத்துக் கணிப்பானது ஆபத்தானதாக அமையலாம். செய்ய வேண்டிய பணிகள் அதிகம் காணப்படுகின்ற நிலையில் இதற்கான காலஅவகாசம் குறைவாக உள்ளது.

சிறிசேன மற்றும் விக்கிரமசிங்க ஆகியோர் தெரிவொன்றைக் கொண்டுள்ளனர். அதாவது இவர்கள் ஒற்றுமையுடன் செயற்பட முடியும். இவ்வாறானதொரு புதிய அத்தியாயத்தின் மூலம் சிறிலங்காவில் அரசியல் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும். அல்லது இவ்வாறானதொரு அரிய வாய்ப்பை விரயமாக்கிய தலைவர்களாகவே இவர்களை இந்த நாடு நோக்கும்.

சிறிலங்காவில் கொடிய யுத்தம் முடிவிற்கு வந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் பல இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் தற்போதும் தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதில் பல்வேறு இடர்களை எதிர்கொள்கின்றனர்.

இவர்களது காத்திருப்பானது நீண்டதாகவும் வலி நிறைந்ததாகவும் காணப்படுகிறது. நாட்டின் இரு தலைவர்களும் இது தொடர்பில் தீர்மானம் எட்டவேண்டும். இந்த வாய்ப்பை நாட்டின் இரு தலைவர்களும் கைவிட்டால் ஒருபோதும் அரசியற் தீர்வை எட்டமுடியாது.

ஆங்கிலத்தில் - Meera Srinivasan

வழிமூலம் - The hindu

மொழியாக்கம் - நித்தியபாரதி

# காணாமற்போனோரின் விவரங்களை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்

## முல்லை. மாவட்ட பிரஜைகள் அமைப்பு கோரிக்கை

யுத்த காலத்தில் காணாமற்போனோரின் விவரங்களை இலங்கை அரசு வெளிப்படுத்த வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் உரிமைக்கான அமையம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி அமையத்தின் ஊடக சந்திப்பு ஒன்று சிலாவத்தை பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இங்குகலந்துகொண்டவர்களேமேற்படிகோரிக்கையை விடுத்தனர்.

இந்த ஊடக சந்திப்பில், முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி தனபாலசிங்கம் புஷ்பாம்பாள் கருத்துக் கூறுகையில் –

தமிழர்களை அடக்கி ஆள நினைத்ததாலேயேதமிழ் இளைஞர்கள் போராட்டத்தில் குதிக்க நேரிட்டது. யுத்த காலத்தில் காணாமல் போன தமிழர்கள் உயிரோடு இருக்கின்றனர். அவர்கள் தொடர்பான பல தகவல்களைஅவர்களதுஉறவினர்கள் அறிந்துகொண்டிருக்கின்றனர்.

எனினும் இந்த விடயங்களை முழுமையாக அறிந்துகொள்ள மொழி பாரிய பிரச்சினையாக உள்ளது. – என்றார்.

தமிழர்களுக்குஇழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்கும்வரை ஐக்கிய நாடுகள் சபை தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் – என மனித உரிமைசெயற்பாட்டாளர்சுமித்த ஹட்சன் சந்திரலீலா கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தை சிங்கள மாவட்டமாக பிரகடனப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் உரிமைக்கான அமையத்தின் உப செயலாளர் சு. பரந்தாமன் கூறினார். (ம-81)

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு உயிரிழந்தவர்கள் இருவரும் ஆண்கள். ஒருவருக்குவயது 35. மற்றவர்வயதானவர்.

மூன்றாவது நபர் சிறுநீரகப் பாதிப்பின் இறுதிக்கட்டத்தில் மரணமானவர் என்று வைத்தியர் ரத்னாயக்கா கூறினார்.

கொழும்பில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி மையம் மேற்படி இரு மரணங்களுக்கும் இந்தவைரஸ் தான்காரணம்என்பதைஉறுதிப்படுத்தியுள்ளதா? – என்று கேட்கப்பட்டபோது –

மருத்துவ ஆராய்ச்சி மையம் இனித்தான் அதனை உறுதி செய்யவேண்டும், ஆனால்அத்தகைய சோதனையைச் செய்து உறுதிப்படுத்தும் வசதி கண்டி போதனா வைத்தியசாலையிலேயே உள்ளது என்றார் அவர்.

இந்த நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள மருத்துவ ஊழியர்கள் எட்டுப் பேரும் இப்போது விடுமுறையில் உள்ளனர்.

மேற்படி வைரஸ் தொற்றுப் பரவிய சிறுநீரக சிகிச்சைப் பிரிவு (வார்ட் இல.69) உடனடியாக நேற்று முன்தினம் மூடப்பட்டது.

அந்தப் பிரிவைத் தொற்று நீக்கும் நடவடிக்கை முழு அளவில் முன்னெடுக்கப்பட்டதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் கூறினார்.

தொற்று நீக்கம் செய்யப்பட்டமையை அடுத்து அந்த வார்ட் நேற்று மீளவும் திறக்கப்பட்டது.

ஏற்கனவே இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியால் வைத்தியசாலைக்கு இந்த வைரஸ்கொண்டுவரப்பட்டுபரப்பப்பட்டிருக்கலாம் என்றும் பணிப்பாளர் கூறினார்.

சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு நிபுணர் குழு ஒன்று இந்த விடயம் குறித்து தீவிர விசாரணைகளையும் ஆய்வையும்ஆரம்பித்துள்ளது.

நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தோர், சிறுநீரக நோயாளர்கள், சிறுவர்கள், கர்ப்பிணிகள்போன்றோரை இந்த வைரஸ் இலகுவில் பீடிக்கும் ஆபத்து உள்ளது எனக் கூறிய வைத்தியர் ரத்னாயக்கா, இந்த விவகாரம் தொடர்பில் மக்களுக்கு விழிப்பூட்டும் செயற்றிட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் சொன்னார்.

இந்த வைரஸ், பறவைகள் மூலம் பரவும் போது 'பறவைக் காய்ச்சல்' என்றும், பன்றி போன்ற விலங்குகளினால் பரவும் போது 'பன்றிக் காய்ச்சல்' என்றும் சுட்டுப் பெயரால் அழைக்கப்படுவதாகவும் –

எனினும் மனிதனில் தொற்றிய பிறகு அவனில் இருந்து ஏனைய மனிதர்களுக்கு இது இலகுவில் பரவக் கூடியது எனவும் –

வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# காரைநகர் பிரதேச செயலாளர் தென்மராட்சிக்கு இடமாற்றம்

## காரைநகர் பிரதேச செயலாளராக தயாரூபன்



காரைநகர்பிரதேசசெயலாளராகக் கடந்த ஐந்து வருடங்கள் பணியாற்றிய திருமதி தேவந்தினி பாபு தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார். இவர் நேற்று முன்தினம்புதன்கிழமைதென்மராட்சி பிரதேசசெயலாளராகக் கடமையைப் பொறுப்பேற்றார்.

இதேவேளை, காரைநகர் பிரதேச செயலாளராக ஈஸ்வரநாதன் தயாரூபன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களபிரதி ஆணையாளராகக்கடமையாற்றியநிலையில் தற்போது பிரதேசசெயலாளராக நியமனம் பெற்றிருக்கின்றார்.

புதிய பிரதேச செயலாளருக்கான வரவேற்பும் இடமாற்றம் பெற்ற பிரதேச செயலாளருக்கான பிரியாவிடையும் நேற்று முன்தினம் காரைநகர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன. (ம)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

## உலகத் தமிழர் பேரவை கோரிக்கை

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற மனிதஉரிமைமீறல்கள்மற்றும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரித்து வரும் நல்லிணக்க ஆலோசனைக்கான செயலணிக் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை செயல்படுத்த வேண்டுமென உலகத் தமிழர் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த ஜனவரி 3 ஆம் திகதியன்று, பல முக்கிய பரிந்துரைகளை உள்ளடக்கிஒரு விரிவான அறிக்கையை நல்லிணக்கவழிமுறைகள் ஆலோசனைக்கான செயலணி வெளியிட்டது. இதனை வரவேற்ற உலகத் தமிழர் பேரவை, இப்பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்–

கடந்த ஒரு வருடமாக இலங்கை முழுவதும் கலந்தாய்வு மேற்கொண்ட 11 உறுப்பினர்கள்அடங்கியநல்லிணக்க ஆலோசனைக்கான செயலணிக் குழு , முழுமையாக மற்றும் ஒரு மனதாக இந்த அறிக்கையைத் தயார் செய்துள்ளது. இப்பணியைத்திறம்படச்செய்து முடித்தமைக்கு அவர்களுக்கு எங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்து கொள்கிறோம். – என்று தெரிவித்துள்ளது.

"இலங்கையின்பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் செயலணிக் குழுவின் உறுப்பினர்களாக அங்கம் பெற்றிருப்பதும், வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களின் விருப்பங்கள் மற்றும் கவலைகள் அவர்களின் கலந்தாய்வில் பிரதிபலிக்கப்பட்டுள்ளமையும், உலக அளவில் பகிரப்பட்ட மானுட உரிமைகள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் இன மற்றும் மதரீதியிலான வேறுபாடுகளைத் தாண்டி இலங்கை சமூகம் செல்ல முடியும் என்ற நம்பிக்கையை எங்களுக்கு அளிக்கிறது" – என்று உலகத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை, மேலும் தெரிவித்துள்ளது.

மேலும்இப்பேரவைவெளியிட்டுள்ள அறிக்கையில், தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமரசம் தொடர்பான அலுவலகத்தின் தலைவரான முன்னாள் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மூன்று முக்கிய இலங்கை அமைச்சர்களின் முன்னிலையில் செயலணியின் விரிவான அறிக்கையை பெற்றுள்ளமை, இந்தஅறிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதையும், சிங்களவர், தமிழர் மற்றும்முஸ்லிம் ஆகிய மூன்று முக்கிய இனங்களுக்கும் இடையேயான இணக்கப்பாடு எந்தளவு அத்தியாவசியமானது என்பதையும் விளக்குகிறது என்றும் அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கைப் போர்க்குற்றம் குறித்து விசாரிக்க சர்வதேச நீதிபதிகளுடன் கலப்பு நீதிமன்றம் அமைப்பதே சிறந்தது என்ற செயலணியின் பரிந்துரை, இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தின் கருத்தையொட்டி அமைந்துள்ளது என்று தெரிவித்த உலகத் தமிழர் பேரவை, இலங்கையின் உள்ளூர் நீதி அமைப்புகளின் மீது தங்களுக்குநம்பிக்கை இல்லை எனநீண்டநாட்களாகவலியுறுத்தப்படும் தமிழ் சமூகத்தின் கருத்தை அண்மையில் வெளிவந்ததமிழ்நாடாளுமன்றஉறுப்பினர்ரவிராஜ்கொலைவழக்குத் தொடர்பான தீர்ப்பு வலுப்படுத்தியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

அதனால், இந்த முக்கியமான தருணத்தில் இலங்கை அரசு மிகவும் துணிச்சலாகச் செயற்பட்டுநல்லிணக்கவழிமுறைகள் ஆலோசனைக்கானசெயலணி வெளியிட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டுமென்று உலகத்தமிழர்பேரவை தான்வெளியிட்டுள்ளஅறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளது.

# புளியங்குளம் - நெடுங்கேணி வீதியில் அடிக்கடி நடமாடும் யானைகள்!

புளியங்குளம்–நெடுங்கேணி வீதியில் மாலை நேரங்களில் யானைகள் அடிக்கடி வீதியை ஊடறுத்துச் செல்வதால் வீதியால்பயணிப்போர்அச்சத்துடன் பயணிக்கவேண்டியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் புளியங்குளம் – நெடுங்கேணி வீதியில் உள்ள வயல்வெளிகள் முடிவடையும் இடத்தில் வீதிக்குள் பிரவேசித்த யானைகள் சுமார் ஒருமணி நேரம் அப்பகுதியில் நடமாடியுள்ளன.

இதனால் அந்த வீதியால் பயணித்த மக்கள், வேலை முடிந்து வீடு திரும்பிய அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் அச்சத்துடனேயே பயணம் செய்தனர் எனத் தெரியவருகிறது. (ஓ)

காலைக்கதிர்
Kalaikkathir

# அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு இதுவரை 23 பேர் சாட்சியமளித்தனர்

யாழ்ப்பாணம், ஜன.13

வடமாகாண அமைச்சர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கென வடக்கு முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முன்னிலையில் இதுவரை 23 பேர் சாட்சியமளித்துள்ளனர்.

இந்த விசாரணைக் குழு இரு தினங்கள் மேற்கொண்ட விசாரணைகளில் நேற்றுமுன்தினம் 9 பேரும், கடந்த செவ்வாய்க்கிழமை 14 பேரும் சாட்சியமளித்துள்ளனர்.

நான்கு அமைச்சர்களுக்கு எதிராகவும் சாட்சியமளிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களுள் ஓர் அமைச்சருக்கு எதிராகவே அதிக சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாட்சியமளித்த அனைவரிடமும் நீதிமன்றம் போன்று சத்தியம்பெறப்பட்டபின்னரே சாட்சியமளிக்க அனுமதிக்கப்பட்டதுஎனவும் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது. (ஓ)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாட்சி போன்ற விடயங்களில் அரசுகணிசமான முன்னேற்றங்களைக் கொண்டுவந்திருக்கின்றது

கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை மீள்பார்வை செய்து, தவறுகளைக் களைந்து, இனங்களுக்கிடையே உண்மையானநல்லிணக்கத்தையும், சமாதானத்தையும் கொண்டு வர வேண்டும் என்ற அரசின் இதயசுத்தியான நிலைப்பாடு காரணமாகவே ஜெனீவாவில் ஐ.நா. தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியது.

எனினும் ஐ.நா. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய சரத்தான வெளிநாட்டுநீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், விசாரணையாளர்கள் போன்றோரை உள்ளடக்கியகலப்புநீதிமன்றம்ஒன்றை உருவாக்கி அதனூடாக போர்க்குற்றவிசாரணைகள்மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற விடயத்தில் அரசுக்குள்ளேயே முரண்பாடுகள் இருக்கின்றன.

கடந்த காலத்தில் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பற்றி காத்திரமானதும் சுயாதீனமானதுமானஉள்ளூர்விசாரணைப் பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்ற விடயத்தில் சகல அரசியல் கட்சிகள் மத்தியிலும்ஒருமைப்பாடுதோன்றியிருக்கின்றது.

ஜே.வி.பி.போன்றகட்சிகள்கூட இதனைஏற்றுக்கொண்டிருக்கின்றன. சர்வதேசநீதிபதிகளின்பங்களிப்பு எந்த அளவில், எந்த மட்டத்தில் இருக்கவேண்டும் என்பது தொடர்பாக அரசு சகல தரப்புக்களுடனும் தீவிர கலந்துரையாடலில் ஈடுபட்டு வருகின்றது. பாதிக்கப்பட்டமக்களின்நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு பொறிமுறை விரைவில் ஏற்படுத்தப்படும்.

இலங்கைக்கு மீண்டும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட வேண்டும் என ஐரோப்பிய ஆணைக்குழு தீர்மானித்திருப்பது வரவேற்கத்தக்கது. இது இலங்கை சரியான பாதையில் பயணிக்கின்றது என்பதைக் காட்டுகிறது. – என்றார்.

பிரிட்டனின் புதிய பிரதமராக திரேசா மே பதவியேற்றதன் பின்னர்முதல்முறையாகஉத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கடந்த செவ்வாய்க்கிழமை பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் பொறிஸ் ஜோன்சனைச் சந்தித்து இருதரப்பு உறவுகள்குறித்துவிரிவாகக்கலந்துரையாடியிருந்தார்.

## ஒற்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றங்கள் வருவதால், ஆளுநருக்கு தற்போது காணப்படுகின்ற அதிகாரங்களையும்புதிய அரசமைப்பு மட்டுப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

சுமந்திரனின் நேர்காணல் தைப்பொங்கல் தினத்தன்று முழுமையாக ஒளிபரப்பாகும் என அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

## ஊறணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளைதைப்பொங்கல்தினத்தன்று இப்பிரதேசத்தை இராணுவத்தினர் விடுவிப்பர் என்று யாழ். அரச அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

தையிட்டி வடக்குப்பகுதி படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டமையைஅடுத்து அந்தப் பகுதி மீனவர்கள் தமது தொழிலைச்செய்வதற்காக அப்பிரதேசத்தை ஒட்டிய கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள நான்கு மீனவ இறங்குதுறைகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வந்தது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவைசேனாதிராசா, வலிகாமம் வடக்குப்பிரதேசசபையின் முன்னாள் தலைவர் சுகிர்தன் ஆகியோர் வடக்குப் படைகளின் கட்டளைத் தளபதியான ஜெனரல் மகேஷ் சேனநாயக்காவைப் பலாலி படைத்தளத்தில் அண்மையில் இரண்டு, மூன்று தடவைகள் நேரில் சந்தித்து இவ்விடயத்தை வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தப் பின்புலத்திலேயே ஊறணிப் பிரதேசத்தின் கணிசமான பகுதி கடற்றொழிலுக்குத் தற்போது அனுமதிக்கப்படுகின்றது.

தையிட்டி வடக்குப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடற்றொழிலுக்காக இந்த 400 மீற்றர் கடற்கரைப் பிரதேசத்துக்குச் சென்று வருவதற்காக சுமார் 20 அடி நீளமான நீண்ட பாதை இரு பக்கங்களும்கட்டைகள் அடித்து, வேலி போடப்பட்டு பாவனைக்கு அனுமதிக்கப்படுகின்றது.


கடற்பரப்பில் மீன்பிடிக்கச் செல்வதற்கான எல்லைக்கட்டுப்பாடுகள் இராணுவத்தினராலோ அல்லது கடற்படையினராலோ விதிக்கப்படவில்லை என்றும் –

மீனவர்கள் தமது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு தமது எல்லை வரை கடற்றொழிலை மேற்கொள்ள முடியும் என்றும் –

யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். (உ)

# ஆட்சியில் உள்ள தேசிய அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை

## முன்னாள் ஜனாதிபதி குற்றச்சாட்டு



கொழும்பு,ஜன.13

ஆட்சியில் உள்ள தேசிய அரசாங்கமானது இதுவரை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அரச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில்விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ள கூட்டு எதிரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஷவை சிறைச்சாலை சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உண்மையில் தேர்தல் வாக்குறுதிகளை நாமே உரிய முறையில் நிறைவேற்றினோம். ஜனாதிபதி தேர்தலின் போது முன்வைக்கப்பட்ட தேர்தல்கள் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் 99 வீதமானவற்றை நாம் நிறைவேற்றியுள்ளோம். – என்றார்.

அவ்வாறே யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வருவோம் என கூறினோம், யுத்தத்தினையும் முடிவுக்கு கொண்டு வந்தோம்.

அதன் பின்னர் நாட்டில் அபிவிருத்தி திட்டங்களைச் செய்வதாகத் தெரிவித்து, அதனையும் நிறைவேற்றி நாட்டினை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் சென்றோம்.

ஆனால், தற்போது தமது ஆட்சிக்காலத்தில் இருந்த அபிவிருத்திகள் அனைத்தும் இன்று முற்று முழுதாக உடைக்கப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது – என்றார் அவர். (ம)

# எதிர்பாராமல் கப்பல் கப்டனாக பணியாற்ற வேண்டி நேர்ந்தது

## ‘சன் சீ’ கப்பலின் வழிகாட்டி சாட்சியம்

எதிர்பாராமலேயே கப்பலின் தலைவனாகச் செயற்பட நேர்ந்தது என ‘எம்.வி. சன் சீ’ கப்பலில் இலங்கைத் தமிழ் அகதிகளை சட்டவிரோதமான முறையில் கனடாவுக்குக் கடத்தினர் எனக் குற்றம்சுமத்தப்பட்டுள்ளநான்கு பேரில் ஒருவரான லெஸ்லி இமானுவேல் சாட்சியமளித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 492 பேர் அடங்கிய இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் குழுவொன்று கனடாவுக்கு எம்.வீ. சன் சீ என்ற கப்பல் மூலம் சென்றமை தொடர்பான வழக்கு விசாரணை தற்போது கனடாவில் இடம்பெற்றுவருகின்றது.

இந்நிலையில் 492 பேரை கனடாவுக்கு அழைத்துச்செல்ல உதவினார் என லெஸ்லி இமானுவேல் என்பவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவருக்கு எதிரான வழக்கு விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை கனேடிய பிரிட்டிஷ் கொலம்பியா உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றது.

சன்.சீ.கப்பலின் உண்மையான கப்டன் கப்பலைக் கைவிட்டதன் பின்னர் தலைமைப் பொறுப்பை கையேற்க வேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு ஏற்பட்டது எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள லெஸ்லி இமானுவேல் விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாம் 15 ஆயிரம் டொலர்களைக் கட்டணமாகச் செலுத்தியே அந்தக் கப்பலில் சென்றார் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் 2001ஆம் ஆண்டு முதல் இலங்கையில் இருக்கவில்லை. அதற்கு முன்பே மலேசியாவுக்குச் சென்ற அவர், கனடா செல்வதற்கு முன்பாக தாய்லாந்தில் தங்கி இருந்துள்ளார்.

இலங்கையில் தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது எனத் தெரிவித்தே அவர் கனடாவில் அகதி அந்தஸ்து கோரியுள்ளார்.

இந்த வழக்கு தொடர்ச்சியாக விசாரிக்கப்படுகின்ற நிலையில் நேற்று முன்தினமும் விசாரணைகள் இடம்பெற்றன. (ஓ)

# ஆஸ்திரேலியாவில் கணவனைக் கொன்ற இலங்கைப் பெண்ணுக்குப் புகலிடம்



மணவாழ்க்கையின் போது...

கொழும்பு,ஜன.13

மேற்கு ஆஸ்திரேலியாவில் தனது கணவனைக் கொன்ற குற்றத்துக்காக சிறைத் தண்டனைஅனுபவித்துவரும் இலங்கையைப்பூர்வீகமாகக்கொண்ட மருத்துவர் சாமரி லியனகேவுக்கு ஆஸ்திரேலியாவில் தங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனது சிறைத் தண்டனை நிறைவடைந்தபின்னர்தன்னை நாடு கடத்த வேண்டாம் என மருத்துவர்சாமரிலியனகே அந்நாட்டு குடிவரவு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

தனது பாதுகாப்பு மற்றும் குடும்பத்தின் நலனைக் கருத்திற்கொண்டு, தன்னை நாடு கடத்த வேண்டாம் என குடிவரவு அமைச்சரிடம் சாமரி லியனகே கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையிலேயே விசாரணை தொடர்பில் மீளாய்வு மேற்கொண்டுசாமரிலியனகேவுக்கு ஆஸ்திரேலியாவில் தங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 5 ஆண்டுகளுக்கும் மேலாக பாலியல் துன்புறுத்தல்கள் உட்பட பல்வேறு வழிகளில் சித்திரவதை செய்தார் எனக் கூறப்படும் அவரது க்ணவனை இந்த பெண் மருத்துவர் 2014ஆம் ஆண்டு ஜூனில் அவர்களது இல்லத்தில்வைத்து சுத்தியலால் அடித்துக் கொலை செய்திருந்தார்.

சாமரிலியனகேயின் கணவர் டினேந்திரா அத்துகோறளையும் ஒரு மருத்துவர் ஆவார். (ஓ)

## கிளிநொச்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு இதுவரை கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டு வந்த மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, பட்டலந்த பயிற்சி முகாமின் புதிய கட்டளைத் தளபதியாக மாற்றப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பாதுகாப்புதலைமையகத்தின் கட்டளைத் தளபதியாக செயற்பட்ட மேஜர் ஜெனரல் எஸ்.ரணசிங்க, 2015.10.18 ஆம் திகதியுடன் அங்கிருந்த மாற்றப்பட்டு மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, கட்டளைத்தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், புதிய கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் அஜீத் காரியகரவன்ன நியமிக்கப்பட்டுள்ளமையுடன், அவர் இதற்கு முன்னர் பட்டலந்த பயிற்சி முகாமின் கட்டளைத்தளபதியாக பதவிவகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய தினம் கிளிநொச்சிப் பாதுகாப்பு தலைமையகத்தின் புதிய கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் அஜீத் காரியகரவன்ன பதவியேற்கவுள்ளார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பில் மக்கள் கருத்துக்கணிப்புக்கு செல்லக்கூடிய அத்தியாயங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை என கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி வாக்குறுதியளித்தார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டுமாயின், மக்கள் கருத்துக்கணிப்பு ஒன்றுக்குச் செல்ல வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவ்வாறாயின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க முடியாது என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# குளவி கொட்டி ஒருவர் மரணம்

கொட்டகலை ஸ்டோனி கிளிப் தோட்டத்தில்குளவிக்கொட்டுக்கு இலக்காகிய ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கொட்டகலை ஸ்டோனிகிளிப் தோட்டத்தைச்சேர்ந்த 68 வயதுடைய மாரிமுத்து ஆறுமுகம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை குளவி கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த இவர் சிகிச்சை பலனின்றிநேற்றுமுன்தினம்உயிரிழந்துள்ளார் என திம்புள்ள – பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

உறவினர் வீட்டுக்குச் சென்ற வழியில் மரத்தில் இருந்த குளவிக்கூடு கலைந்ததால் வந்த குளவி கொட்டியதில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இவர், கொட்டகலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். பின்னர்மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த போதும் நேற்றுமுன்தினம் அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என உறவினர்கள் தெரிவித்தனர். (ஓ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.